வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු








Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 16.05.2025 வெள்ளிக்கிழமை | இதழ் : 137 | பக்கங்கள் : 12


# இலங்கையில் நீதியை நிலைநாட்ட இன்னும் நடவடிக்கைகள் அவசியம்

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் பிரிட்டிஷ் எம். பிக்கள் வலியுறுத்தல்!



லண்டன், மே 16

**இலங்கையின் போர் குற்றவாளிகளுக்கு எதிராக பிரிட்டன் விதித்த தடைகளை வரவேற்கிறோம். ஆனால், நீதிக்காக - பொறுப்புக்கூறலுக்காக இன்னமும் குறிப்பிடத்தக்க அளவிலான நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாக உள்ளது - இவ்வாறு, பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.**

பிரிட்டன் பாராளுமன்றத்தில் முள்ளிவாய்க்கால் படுகொலையின் 16ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதில், பங்கேற்று உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ஹரத் தோமஸ், "இலங்கையில் மனித உரிமைகள் மீறலின் அளவு குறைவடையவில்லை. இந்த வருட ஆரம்பத்தில் பிரிட்டன் அரசாங்கம் யுத்த குற்றவாளிகளுக்கு எதிராக தடைகளை விதித்தது. ஆனால், நீதிக்கான பல, இன்னும் நிறையவே செய்யவேண்டியுள்ளன", என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் சிபான் மக்டோனா பேசுகையில், "முள்ளிவாய்க்காலில் போர் சூனிய வலயம் மீதான இலங்கை அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து 2009ஆம் ஆண்டு லண்டனில் தமிழ் சமூகம் எவ்வாறு அணி திரண்டது என்பது எனக்கு நினைவிருக்கின்றது. இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு எதிரான பிரிட்டனின் தடை சிறிய நடவடிக்கை

11



## சட்டவிரோதமாக நாடு திரும்பிய அகதிகள் கைது!

- எஸ்.தில்லைநாதன் -

வடமராட்சி, மே 16

தமிழக அகதி முகாமிலிருந்து சட்டவிரோதமாக நாடு திரும்பிய அகதிகள் நால்வரும் அவர்களை அழைத்து வந்த மீனவர்கள் மூவருமாக 7 பேரை வல்வெட்டித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள், நேற்று வியாழக்கிழமை காலை 6 மணியளவில் வல்வெட்டித்துறை ஆதி கோவிலடி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், அவர்கள் பயணித்த

11

## குற்றவாளிகளை ஐ. சி. சி.இல் பாரப்படுத்த குரல்கொடுப்பேன்

### உமா குமரன் எம். பி.



லண்டன், மே 16

இலங்கையில் மனித உரிமைகள் மீறலில் ஈடுபட்டவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் (ஐ. சி. சி.) பாரப்படுத்த வேண்டும் என்றும் அதற்காக தொடர்ந்து அழுத்தம் கொடுப்பேன் என்றும் பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினரான உமா குமரன் தெரிவித்துள்ளார்.

11

## இனப்படுகொலை நடக்கவில்லையென்றால் சர்வதேச விசாரணைக்கு ஒத்துழையுங்கள்!

### நாமல் ராஜபக்ஷவுக்கு பிரம்டன் மேயர் சவால்

ஒட்டாவா, மே 16

"இனப்படுகொலை நடக்கவில்லை என்று உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தால், நீதியை குழப்புவதற்கான நடவடிக்கைகள், விசாரணைகளிலிருந்து மறைந்திருந்தல் போன்றவற்றை கைவிட்டு, சர்வதேச விசாரணைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை ராஜபக்ஷ குடும்பம் வழங்க வேண்டும்" - இவ்வாறு கனடாவின் பிரம்டன் நகர முதல்வர் பற்றிக் பிரவுண், நாமல் ராஜபக்ஷவுக்கு சவால் விடுத்துள்ளார்.

கனடாவின் பிரம்டன் நகரில் தமிழின நினைவுத்தூபி திறக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன், இனப்படுகொலை நடக்கவில்லை - நடந்தது இராணுவத்துக்கும் பயங்கரவாத விடுதலை

11



Patrick Brown @patrickbrownont · Follow

The Rajapaksas' opposition to the Tamil Genocide Memorial is the surest signal that we are on the right path recognizing the innocent civilian lives lost at the hand of this family.

If confident no genocide occurred, the Rajapaksa family should fully cooperate with the Show more

Namal Rajapaksa @RajapaksaNamal

It is concerning that Canada has inaugurated a Tamil Genocide Memorial when, under international law, no genocide has been proven or can be proven against the Sri Lankan military in its conflict with the LTTE terrorists.

The so-called Tamil genocide monument appears to be a politically driven move by the Canadian government, which has long been influenced by certain factions within the Tamil diaspora. Rather than working towards peace and unity, these groups have fueled division for their own interests.

## குமுதினி படகு படுகொலை; நெடுந்தீவில் அனுஷ்டிப்பு!



யாழ்ப்பாணம், மே 16

குமுதினி படகு படுகொலையின் 40ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை நெடுந்தீவில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மாவிலி துறையில் அமைக்கப்பட்டுள்ள படுகொலை நினைவுத்தூபி வளாகத்தில் இந்த நிகழ்வு நேற்று முன்னெடுக்கப்பட்டது. முதன்மை சுடரை கா. புவனேந்திர சர்மா ஏற்றிவைத்தார். தொடர்ந்து நெடுந்தீவு பங்குத் தந்தை ப. பத்திநாதன் அடிகளார், தென்னிந்திய திருச் சபை போதகர், பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், இந்தப் படுகொலையின்போது

11

ஐ.த.தே. கூட்டணி, தமிழ் அரசு உடன்பாடு:

## அதிக ஆசனங்களை கைப்பற்றிய கட்சிக்கு மற்றைய தரப்பு ஆதரவு!

- குமார. கோகுலன் -

வவுனியா, மே 16

வவுனியாவில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் கூடிய ஆசனங்களை பெற்ற கட்சிக்கு மற்றைய தரப்பு ஆதரவளிப்பது என்று உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த இணக்கப்பாடு வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி சபைகளிலும் தொடர்வது

11

## கொட்டாஞ்சேனை மாணவி விவகாரம்: நீதிமன்றில் நேற்று சாட்சியங்கள் பதிவு

கொழும்பு, மே 16

ஆசிரியரின் பாலியல் துன்புறுத்தல்களால் தவறான முடிவெடுத்து உயிரிழந்தார் என்று கூறப்படும் கொழும்பு - கொட்டாஞ்சேனை தமிழ் மாணவியின் மரணம் தொடர்பில் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் நேற்று சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

பதில் நீதிவான் சம்பத் ஜெயவர்த்தன முன்னிலையில், கொட்டாஞ்சேனை பொலிஸாரால் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அவர்களின் வாக்குமூலங்கள்

11



## அரியாலை மனித புதைகுழி அகழ்வு பணிகள் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மே 16

அரியாலை சித்துபாத்தி மயானத்தில் (செம்மணி அருகே) மனித எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதிகளில் நேற்று வியாழக்கிழமை அகழ்வு பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

நேற்றைய தினம் மனித எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்ட இடங்கள் அளவீடு செய்யப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டன. வரும் நாட்களில் அகழ்வு பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

முன்னதாக, குறித்த மயானத்தில் மின்தகன மேடை அமைப்பதற்காக கிடங்கு வெட்டப்பட்டது. அப்போது, மனித எலும்பு

11




# போராளிகள் நலன்புரி சங்கத்தால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

வவுனியா, மே 16

இறுதிப் போரில் கொல்லப் பட்ட மக்களை நினைவேந்தும் முள்ளிவாய்க்கால் நினைவேந் தல் நிகழ்வு நேற்று போராளி கள் நலன்புரி சங்கத்தால் முன் னெடுக்கப்பட்டது.

வவுனியாவில் செ. தனுபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு நினைவுக்கல்வெட் டுக்கு மலர்மாலை அணிவிக் கப்பட்டது. தொடர்ந்து, முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப் பட்டது.

அதனை தொடர்ந்து மாண வர்களின் கலைநிகழ்வுகள், நினைவுரைகள், முள்ளிவாய் க்கால் நினைவுப்பாடல் வெளியி டப்பட்டது. இதன்போது, பாடசாலை மாணவர்களுக்கு புத்தக பையும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாரா ளுமன்ற உறுப்பினர் ப. சத்திய லிங்கம் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் முன்னாள் போராளி கள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

# சதாவதானி கதிரவேற்பிள்ளை 118ஆவது நினைவுதின நிகழ்வு

வடமராட்சி, மே 16

மேலைப்புலோலி சதாவ தானி நா. கதிரவேற்பிள்ளை யின் 118ஆவது ஆண்டு நினைவு விழா நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சதாவதானி அரங்கில் நடைபெறவுள்ளது.

சதாவதானி சனசமூக நிலை யத் தலைவர் ந. நிரஞ்சன் தலை மையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உயர் பட்ட படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி தி. வேல்நம்பி, சிறப்பு விருந்தினராக பருத் தித்துறை பிரதேச செயலர் சி. சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நினைவு தினத்தை முன் னிட்டு வடமராட்சி தழுவிய ரீதியில் நடத்தப்பட்ட தரம் 1 தொடக்கம் 12 வரையான மாணவர்களிடையே நடத்தப் பட்ட பேச்சு, மனனம், பண் ணிசை, பொது அறிவு, திறந்த கட்டுரை போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு களும் இந்த நிகழ்வில் வழங் கப்படவுள்ளன. (ஐ-02)

# நல்லூர் ஆலயம் அருகேயுள்ள அசைவ உணவகத்துக்கு தடை

## யாழ். மாநகர ஆணையாளரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 16

நல்லூர் ஆலயம் அருகே அமைக்கப்பட்டுள்ள அசைவ உணவகத்துக்கு தடை விதிக்கக் கோரி யாழ். மாநகர சபை ஆணையாளருக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடிதம் ஒன்றை வழங்கியுள்ளது.

அந்தக் கட்சியின் சார்பில் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சந்திரசேகரம் இராஜகுமாரால் இந்தக் கடிதம் அளிக்கப்பட் டுள்ளது.

"நல்லூர் ஆலயத்தின் சூழ மைவில் புதிதாக அமைக்கப் பட்டுள்ள மாமிச உணவகம், சைவ மக்களின் மனங்களுக்கும், ஆன்மீக உளவியலுக்கும் மதிப் பளிக்காமல் நடத்தப்படுவது குறித்து மக்கள் எமக்கு முறை யிட்டு வருகிறார்கள்.

சைவ மக்களின் ஆன்மீக உளவியலுக்கு இடையூறை ஏற்படுத்தும் குறித்த மாமிச உணவகத்தில் மாமிச உணவு தயாரிக்கும் செயற்பாடுகளுக்கு முற்றாகத் தடை விதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. (ஐ-05)



யாழ். பொதுநூலகத்தின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற உளநல மருத்துவர் எஸ். சிவதாஸ் எழுதிய 'பேறுகால உளநலம் பேசாததை பேசுவோம்' நூலை பிரதம விருந்தினர் திருமதி ஞானருபன் கவினி வெளியிட்டு வைக்க முள்ளிவாய்க்கால் பதுங்கு குழியில் தனது மகனைப் பெற்றெடுத்த சுரேஷ்குமார் மதி பெற்றுக் கொண்டார்.

# குப்பிழான் உபதபால் பணிமனை, கலைவாணி ச.ச. நிலையம் திறப்பு



யாழ்ப்பாணம், மே 16

குப்பிழான் உப தபால் பணி மனை, கலைவாணி சனசமூக நிலையம் என்பவற்றின் திறப்பு விழா நேற்று முன்தினம் புதன் கிழமை நடைபெற்றது.

குப்பிழான் விவசாய சம்மே ளனத் தலைவர் செ. நவரத்தின ராசா வின் ஒருங்கிணைப்பில் நடந்த இந்த நிகழ்வில் யாழ்ப் பாண பிராந்திய அஞ்சல் அத்தி யட்சகர் எஸ். ஏ. டி. பெர் னாண்டோ, மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் இயந்திர வியல்துறை ஓய்வுநிலை பேராசிரியர் க. பாலசுப்பிர மணியம், ஓய்வுநிலை கிராம அலுவலர் செல்லத்துரை ஞான சபேசன், சுன்னாகம் தபாலதிபர் திருமதி கவிதா சிவகுமாரன், வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் செயலாளர் அழ கேசன் பிரதீபன், குப்பிழான் தெற்கு கிராம அலுவலர் செல்வி பிரதீபா சுதாகரன் ஆகியோர் பங்கேற்றனர்.

விருந்தினர்கள் கலைவாணி சனசமூக நிலைய நிர்வாகத்தி னர் மற்றும் கிராம மக்களால் வரவேற்கப்பட்டனர். மங்கல விளக்கேற்றலை தொடர்ந்து கலைவாணி சனசமூக நிலையம் மற்றும் குப்பிழான் உப தபால் அலுவலகத்தின் பெயர்ப்பலகை கள் திரை நீக்கம் செய்து வைக் கப்பட்டன. கலைவாணி சன சமூக நிலையம் மற்றும் உப தபால் அலுவலகம் அமைந்தி ருந்த பிரதான கட்டடத் தொகுதி யின் கல்வெட்டை செ. நவரத் தினராசா தம்பதியர் இணைந்து திறந்து வைத்தனர்.

யாழ்ப்பாண பிராந்திய அஞ் சல் அத்தியட்சகர் பெர் னாண்டோ புதிதாக அமை யப்பெற்ற உபதபால் பணி மனையை நாடா வெட்டி திறந்து வைத்தார். தொடர்ந்து புதிய இடத்தில் அமையப் பெற்ற அஞ்சல் அலுவலகத்தில் கொடுக்கல் - வாங்கல் சேவைகள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மொறட்டுவை பல்கலைக்கழ கத்தின் இயந்திரவியல்துறை ஓய்வுநிலை பேராசிரியர் க. பாலசுப்பிரமணியம் கலை வாணி சனசமூக நிலையம் மற்றும் நூலகம் நாடா வெட்டி திறந்து வைத்தார். தொடர்ந்து கலைவாணி சனசமூக நிலையத் துக்கு நிதி உதவிகளை வழங்கி யோர் விபரங்கள் அடங்கிய கல்வெட்டு திறந்து வைக்கப் பட்டது. (ஐ)

# மண்டைதீவில் நகை, பணம் என்பன களவு

யாழ்ப்பாணம், மே 16

மண்டைதீவில் வீடு ஒன்றில் நகை, பணம் திருடப்பட்ட சம் பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள் ளார்.

மண்டைதீவு 6ஆம் வட்டா ரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவரு பவை வருமாறு,

மட்டக்களப்பை சேர்ந்த சந்தேகநபர் வீடு ஒன்றில் தங்கி யிருந்து முதியவர் ஒருவரை பராமரித்து வந்துள்ளார். இந்த நிலையில், அண்மையில் முதிய வர் உயிரிழந்தார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் அந்த வீட்டுக்கு சென்ற சந்தேகநபர் மூன்றரை பவுண் நகை, 3 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் மற்றும் 700 யூரோ என்பவற்றை திருடிச் சென்றார் என்று கூறப்படுகிறது.

இது தொடர்பில் ஊர்காவற் துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. சம்பவம் தொடர்பில் விசாரித்த பொலிஸார் சந்தேகநபரை கைது செய்ததுடன், அவரை நீதிமன் றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-05)

# கிளாலி பிரதேசத்தில் குடிதண்ணீர் நெருக்கடி!

## தண்ணீர் இணைப்பை விரைவுபடுத்தவும் கோரிக்கை

கிளிநொச்சி, மே 16

கிளாலி பிரதேசத்தில் மக்கள் நீண்டகாலமாக குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக் கப்பட்டது.

கிளிநொச்சி - பச்சிலைப் பள்ளி - கிளாலியில் பெரும்பா லான கிணறுகளின் தண்ணீர் உவர் நீராகவும், கடும் காவி நிறத்திலும் காணப்படுகிறது. இதனால் பொது அந்த நீரை பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

கிளாலியில் சிலரின் வீடுக ளில் நல்ல தண்ணீரை மக்கள் பெறுவதுடன், பிரதேச சபை ஆங்காங்கே வைத்துள்ள தண் ணீர் தாங்கியிலிருந்தும் தண் ணீரை பெறுகின்றனர். எனி னும், இந்தத் தண்ணீர் அவர்க ளின் தேவையை பூர்த்தி செய் யப் போதுமானதாக இல்லை என்று கூறப்படுகிறது.

தேசிய நீர் வழங்கல் வடி காலமைப்பு சபையால் வழங்கப் படும் தண்ணீரை விரைவு படுத்தி வழங்குமாறும் ஏனைய கிராமங்களுக்கு வழங்கப்பட் டமை போன்று இலவச தண் ணீர் இணைப்பை வழங்குமா றும் கிளாலி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# யாழ். தாதியர் பயிற்சி கல்லூரியின் ஆண்டு நிறைவில் நடைபயணம்!

யாழ்ப்பாணம், மே 16

யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சி கல்லூரியின் 65ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன் னிட்டு யாழ். தாதியர் பயிற்சி கல்லூரியும் யாழ். போதனா மருத்துவமனையும் இணைந்து நடத்திய தாதியர்களின் நலனை மேம்படுத்தும் நடைபயணம் நேற்று நடைபெற்றது.

தாதியர் பயிற்சி கல்லூரி யின் முன்றலில் ஆரம்பமான இந்த நடைபயணமானது மணிக்கூட்டு கோபுர வீதி யூடாக யாழ். பொது நூலகம் வரை சென்று, அங்கிருந்து கண்டி பிரதான வீதியூடாக சென்று, பின்னர் முதலாம் குறுக்கு தெரு வீதியூடாக மீண் டும் யாழ். தாதியர் பயிற்சி கல் லூரி முன்றலில் நிறைவடைந் தது.

இந்த நடை பயணத்தில் யாழ். போதனா மருத்துவமனை யின் பணிப்பாளர் கலாநிதி த. சத்தியமூர்த்தி, தாதியர் பயிற் சிக் கல்லூரி அதிபர், நிர்வாக துறையினர், தாதியர் பயிற்சி கல்லூரி மாணவர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ-05)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
16.05.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 02

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மூன்றில் இரண்டு பெரும்பான்மை

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தேசிய மக்கள் சக்தியின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை நினைவுபடுத்தியிருக்கிறார். மக்களின் ஆணைக்கு எவரேனும் இடையூறு விளைவிக்க முற்பட்டால் தங்களிடமுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்துவோம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். ஜனாதிபதி குறிப்பிடும் ஒரு விடயம் உண்மைதான். அதாவது, அவர்களிடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருப்பதும் தேவைப்பட்டால் அதனைக் கொண்டு புதிய சட்டங்களை ஆக்க முடியும் என்பதையும் எவராலும் மறுக்க முடியாது. ஆனால், அரிய பெரும்பான்மையை இதுவரையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பயன்படுத்த முயற்சிக்கவில்லை என்பதே உண்மை.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இதுவரையில் மெதுவாகவே விடயங்களை நகர்த்தி வருகிறது. அவர்களிடம் என்ன திட்டம் இருக்கிறது. உண்மையில், அவர்கள் இலங்கையை எவ்வாறு வழிநடத்திச் செல்ல முற்படுகின்றனர் என்பதில் தெளிவான வரைபடமொன்றை காணமுடியவில்லை. இதேவேளை, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தொடர்பான மக்கள் ஆதரவில் பெரியளவில் வீழ்ச்சியும் ஏற்படவில்லை.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளின் ஊடாகவும் தாங்களே பிரதான சக்தி, தங்களை எதிர்க்கும் நிலையில் பிறிதொரு சக்தி இலங்கையில் இல்லை என்பதை அநுர அரசாங்கம் மீண்டும் நிரூபித்திருக்கிறது. உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் பெரியளவில் ஆர்வம் காண்பித்திருக்கவில்லை என்னும் கணிப்பும் உண்டு. உள்ளூராட்சித் தேர்தலை முன்வைத்து நாடு தழுவிய அரசியல் அலையொன்றை ஏற்படுத்துவது கடினமானது. இந்த நிலையில் அடுத்த பாராளுமன்றத் தேர்தல் வரையில் தங்களின் திட்டங்களை அமுல்படுத்துவதற்கான அவகாசம் அவர்களுக்கு உண்டு.

தேசிய மக்கள் சக்தி சில அடிப்படையான விடயங்கள் தொடர்பில் இதுவரையில் தங்களின் நிலைப்பாட்டை வெளிப்படையாக முன்வைக்கவில்லை. குறிப்பாக, ஈழத் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணும் விடயத்தில் இதுவரையில் உறுதியான நிலைப்பாடுகள் எதனையும் வெளியிடவில்லை. இது அவர்கள் பக்கத்திலுள்ள பிரச்னையாகும்.

மாகாண சபைகள் தேர்தலை அவர்கள் நடத்தாமல் விடுவதற்கான காரணங்கள் இல்லை. எனவே, அதனை நோக்கி அவர்கள் செல்வார்கள். இலங்கையின் அரசியல் சூழலில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் அரசமைப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் செல்வதற்கு - அதாவது, அதனை விடவும் கூடுதலான அதிகாரங்களை உள்ளடக்கிய தீர்வுப் பொதி ஒன்றை வழங்கக்கூடிய நிலையில் தேசிய மக்கள் சக்தி இருப்பதற்கான வாய்ப்புகள் இல்லை என்றே கூறலாம்.

நடைமுறையிலும் அது மிகவும் சிக்கலானது. ஒருவேளை, ஜனாதிபதி அநுர குமாரவிடம் இந்த விடயம் தொடர்பில் சாதகமான பார்வை இருந்தாலும்கூட அதனை நடைமுறைப்படுத்த முயற்சிப்பதானது முயலில் கொம்பை தேடுவதாகவே அமையலாம். சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோதும் இவ்வாறானதோர் அரசியல் சூழலே காணப்பட்டது. இங்கு தனிநபர்களின் விருப்பு வெறுப்புகள் விடயமல்ல, மாறாக அவர்கள் எவ்வாறானதோர் அரசியல் சூழலை பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர் என்பதே முக்கியமானது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் அரசாங்கத்திடமுள்ள அரிய மூன்றில் இரண்டு தனிக்கட்சி பெரும்பான்மையைக் கொண்டு பல நல்ல விடயங்களை செய்ய முடியும்தான். ஆனால், அது நடக்குமா என்னும் கேள்வியுடன்தான் விடயங்களை நோக்க வேண்டியிருக்கிறது. ஆகக்குறைந்தது அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்திலிருந்து முன்னோக்கிச் செல்லக் கூடியதொரு நிலைமை ஏற்பட்டால்கூட அதுவே தேசிய மக்கள் சக்தியின் மிகவும் சிறந்த பங்களிப்பாக இருக்க முடியும்.

# உள்ளூராட்சி தேர்தல்களின் முடிவுகள்: சகல தரப்புகளையும் அரவணைக்கும் ஆட்சிமுறைக்கான ஓர் அழைப்பு

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
இலங்கை தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

உள்ளூராட்சி சபைகளில் பல இனத்தவர்களும் பல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் ஒத்துழைத்துச் செயற்படுவதை அரசாங்கம் ஆதரிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருக்கும் தேசிய சமாதானப் பேரவை, உள்ளூராட்சி தேர்தல்களின் முடிவுகள் சகல தரப்புகளையும் அரவணைக்கும் ஆட்சிமுறை ஒன்றை வேண்டிநிற்கின்றன என்று கூறியிருக்கிறது.

இது தொடர்பில் தேசிய சமாதானப் பேரவை வெளியிட்டிருக்கும் ஊடக அறிக்கை ஒன்றில் கூறப்பட்டிருப்பதாவது -

கடந்த காலத்தைப் போன்று பெருமளவில் அரச வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படாமல் அண்மைய உள்ளூராட்சி தேர்தல்கள் அமைதியாகவும் ஒழுங்கமை வான முறையிலும் நடந்து முடிந்திருப்பது உற்சாகம் தரும் ஒரு மாற்றத்தைக் குறித்து நிற்கிறது. தேர்தல் நேர்மையையும் ஜனநாயக நியமங்களையும் பேணிக் காக்க வேண்டும் என்பதில் தற்போதைய அரசாங்கத் துக்கு இருக்கும் மெச்சத்தக்க பற்றுறுதியை அது வெளிக்காட்டுகிறது.

தேர்தல்கள் நடைபெற்ற 339 உள்ளூராட்சி சபைகளில் 267 சபைகளில் கூடுதல் ஆசனங்களை கைப்பற்றியதுடன் 120 சபைகளில் அறுதிப் பெரும்பான் மையைப் பெற்று நாட்டில் மிகவும் பெரிய அரசியல் கட்சியாக வெளிக் கிளம்பியிருக்கும் ஆளும் தேசிய மக்கள் சக்தியை நாம் வாழ்த்துகிறோம். உள்ளூராட்சி சபைகளில் அரசாங்கம் எவ்வாறு பெரும்பான்மையை அமைக்கப் போகிறது என்பதிலும் எதிர்க்கட்சிகளின் தலைமையிலான சபைகளை எவ்வாறு ஒப்புரவாக கையாளப்போகிறது என்பதிலுமே அதன் அரசியல் மேதகைமை (Statesmanship) பரீட்சைக்கு உள்ளாகப் போகிறது.

வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல்களின் முடிவுகளை அதாவது தமிழர்களையும் முஸ்லிம் களையும் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகள் அந்த இரு மாகாணங்களிலும் பெருமளவு சபைகளில் பெற்ற வெற்றிகள் அந்த மக்களின் வேறுபட்ட தேவைகளையும் அபிலாசைகளையும் வெளிக்காட்டு வதாகவும் அவர்களுடன் முழு அளவில் ஊடாட்டங்களை அரசாங்கம் செய்ய வேண்டிய அவசியத்தை உணர்த்துவதாகவும் தேசிய சமாதானப் பேரவை கருதுகிறது.

வடக்கு, கிழக்குக்கு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள் மேற்கொண்ட உயர்மட்ட விஜயங்களின் மூலமாக சிறுபான்மைச் சமூகங்களுக்கு நேசக்கரத்தை நீட்டுவதற்கு அரசாங்கம் பாராட்டத்தக்க முயற்சிகளை முன்னெடுத்தது. ஆனால், இந்த அடையாள பூர்வமான சமிக்ஞைகளை தொடர்ந்து வடக்கு, கிழக்கில் தமிழர் கள், முஸ்லிம்களினதும் மலையகத்தில் தோட்டத் தொழிலாளர் சமூகத்தினதும் வரலாற்று ரீதியான மற்றும் சமகால பிரச்சினைகளை கையாளக்கூடிய உறுதி யான கொள்கைகளை அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டும்.

கட்டமைப்பு ரீதியான சமத்துவம் மற்றும் பொரு ளாதார நீதி மீதான அரசாங்கத்தின் பற்றுறுதி, இலங்கையின் பல்வகைமையையும் பன்முகத்தன்மையையும் மதிக்கும் வகையிலான - வெளிப்படைத் தன்மை கொண்டதும் சகல தரப்புக்களையும் அரவணைக்கும் பாங்குடையதுமான தீர்மானம் எடுக்கும் செயன்முறையுடன் இணைந்ததாக அமையுமானால் சிறுபான்மைச் சமூகங்களின் வரவேற்பை பெருமள வுக்கு பெறமுடியும் என்று தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது.

உள்ளூராட்சி தேர்தல்களின் முடிவுகளை அரசாங் கம் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் அரசியல் பிரதிநிதிகளை ஆட்சிமுறையில் பங்காளிகளாக்குவதற்காக அவர்களுடன் பெருமளவுக்கு ஊடாட்டங்களைச் செய்வதற்கான ஒரு வாய்ப்பாக நோக்க வேண்டும் என்று நாம் வலியுறுத்துகிறோம். விரைவாக தேர்தல்களை நடத்தி மாகாணசபை முறைமையை மீண்டும் செயற்பட வைப்பதுடன் அதிகாரப்பகிர்வு குறித்து பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புவதை நோக்கிய முக்கியமான அடியெடுத்து வைப்புக்களாக அமைய முடியும்.

பாராளுமன்றத்தில் மூன்றில் பெரும்பான்மை இருக்கும் நிலையில், நீண்டகாலமாக தாமதிக்கப்பட்டிருக்கும் அரசியல் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கும் முறைமை மாற்றத்தைக் கொண்டுவருவதாக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்குமான ஒப்பற்ற வாய்ப்பு ஒன்றை அரசாங்கம் கொண்டிருக்கிறது. முறைமை மாற்றத்தைச் செய்வதற்காகவே கடந்த வருடம் ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் அரசாங்கம் ஆணைகளைப் பெற்றது.

மாகாணசபை முறைமையை மீண்டும் செயற்பட வைத்து அதற்கு அதிகாரமளித்தல், வடக்கில் இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நிலங்களை அவற்றின் சட்டரீதியான உரிமையாளர்களுக்கு திருப்பிக் கையளிப்பதை துரிதப்படுத்துதல், கடந்தகால வனமுறைகளுக்கு பெறுப்புக்கூறப்படுவதை உறுதிசெய்தல், உள்ளூராட்சி பிரதிநிதிகளுக்கு அதிகாரமளித்தல், எளிதில் ஊறுபடக்கூடிய இன - மத சமநிலையை குழப்புகின்ற அத்துமீறல்களை தடுத்து நிறுத்துதல் ஆகியவையும் இவற்றில் அடங்கும்.

குறிப்பாக, துருவமயமாதலை குறைப்பதற்காக உள்ளூராட்சி சபைகளில் பல இனங்களுக்கு இடையிலும் பல கட்சிகளுக்கு இடையிலும் ஒத்துழைப்பை ஆதரிக்க வேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை

(11ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மே - 16 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம் - வைகாசி 02
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சதுர்த்தி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும்.

**இடபம்**
சகோதரர் வகையில் ஒற்றுமை பிறக்கும். கேட்ட இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். மனைவி வழியில் ஆதரவு பெருகும். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள்.

**கடகம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**சிம்மம்**
எதிர்பார்த்ததில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**கன்னி**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். முயற்சியால் முன்னேறுவீர்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் உங்களின் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். இனிமையான நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். சிறுசிறு அவமானம் ஏற்படக்கூடும். வேலையாட்கள் அதிருப்தி அடைவார்கள்.

**தனுசு**
குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் கனிவாகப் பழகுங்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். பொறுமை தேவை.

**மகரம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். புது தொழில் தொடங்குவீர்கள். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். எண்ணங்கள் நிறைவேறும் நாள்.

**கும்பம்**
உங்கள் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்து டன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். கடமையுணர்வுடன்செயல்படவேண்டும்.

**மீனம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். உற்சாகமான நாள்.

# யாழில் கணக்காய்வு முகாமைத்துவ கூட்டம்



யாழ்ப்பாணம், மே 16

இரண்டாம் காலாண்டுக்கான கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த பதில் அரசாங்க அதிபர், கடந்த கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் அடுத்த காலாண்டுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய செயல்பாடுகள் தொடர்பாகவும் ஆராய்வதே இக் கூட்டத்தின் நோக்கமாகும் எனவும் மாவட்ட நிதி நிர்வாக நடவடிக்கைகளை சரியாக மேற்கொள்வதன் ஊடாக ஐய வினாக்களைத் குறைத்துக் கொள்ளலாம் எனவும் தெரிவித்தார். இதற்கான பொறிமுறையொன்றை உருவாக்க வேண்டிய தேவை காணப்படுவதாகவும் குறிப்பிட்டதுடன், திணைக்களத் தலைவர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் நடைமுறை ரீதியில் சமூக நலன் கருதி அபிவிருத்தித் திட்டங்களுக்காக சில முடிவுகளை எடுப்பதனால் சில இடர்பாடுகளை எதிர்கொள்வதாகவும் தெரிவித்தார். பிரதேச செயலாளர்கள் வினைத்திறனாக செயல்படுவதாகவும் மேலும் வலுவாக செயல்படுவதன் ஊடாக நிதி முகாமைத்துவத்தை சிறப்பாக பேணமுடியும் என்றும் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் கணக்காய்வு அத்தியட்சகர் திருமதி விஜயசிறி பிரேமதாஸ, தேசிய கணக்காய்வு முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் பிரபாகரன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறீமோகனன், பிரதம கணக்காளர் எஸ். கிருபாகரன், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் எஸ். ரமேஸ்குமார், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உள்நாட்டலுவல்கள் பிரிவின் உள்ளகக் கணக்காய்வாளர் செல்வி என். பொன்ராணி திட்டமிடல் பணிப்பாளர் இ. சுரேந்திரநாதன் மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள் மாவட்ட மற்றும் பிரதேச செயலக கணக்காளர்கள், துறைசார் கிளைத்தலைவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(எ)

# ஆனையிறவு உப்பை சகல பகுதிகளுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

## இளங்குமரன் எம். பி. சொல்கிறார்



கிளிநொச்சி, மே 16

ஆனையிறவு உப்பினை சகல பகுதிகளுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் ஆனையிறவு உப்பளத்துக்கு சென்ற அவர் உப்பளத்தின் நிர்வாகத்தினருடன் கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய தொழிற்சாலைகளில் ஒன்றாக காணப்படுகின்ற ஆனையிறவு உப்பளத்தில் பணியாற்றும் பருவ கால பணியாளர்களுக்கான உரிய வேதனம் வழங்கப்படாமை மற்றும் உரிய வேலைகள் வழங்கப்படாமை என பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து நேற்று முன்தினம் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்தை அடுத்து அங்கு சென்ற இளங்குமரன் எம். பி., சம்பந்தப்பட்ட தரப்புடன் கலந்துரையாடினார். இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், ரஜ லுனு என்ற பெயர் முன்னர் இருந்த அரசாங்கத்தால் சூட்டப்பட்டிருந்தது. அந்த பெயர் தற்போது மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பல கோரிக்கைகளை முன் வைத்து போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுக்கான நியாயம் வழங்கப்படும் என்பதுடன் நாட்டின் சகல பகுதிகளுக்கும் உப்பினை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அத்தோடு, குறிஞ்சா தீவு உப்பளத்தை அபிவிருத்தி செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்த வேலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(எ)

# யாழ். மாவட்ட செயலகத்தில் கண் பரிசோதனை



யாழ்ப்பாணம், மே 16

வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட செயலகத்தில் சிரமதானம், மர நடுகை மற்றும் கண் பரிசோதனை முகாம் என்பன மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மாவட்ட செயலக உத்தியோகத்தர்களால் மாவட்டச் செயலக வளாகத்தில் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டதனைத் தொடர்ந்து மர நடுகை பழைய பூங்காவில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அனுசரணையில் உத்தியோகத்தர்களுக்கான கண் பரிசோதனை முகாம் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறீமோகனன், பிரதம கணக்காளர் எஸ். கிருபாகரன், திட்டமிடல் பணிப்பாளர் இ. சுரேந்திரநாதன், உதவி மாவட்ட செயலாளர் உ. தர்சினி உள்ளிட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

(எ)

# 150 உள்ளூராட்சி சபைகளில் நாமே ஆட்சி அமைப்போம்!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



கொழும்பு, மே. 16

**பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களில் நாமே வெற்றி பெற்றுள்ளோம். 19ஆம் திகதிக்கு முன்னர் 150 உள்ளூராட்சி மன்றங்களுக்கான பதவிகளுக்கு பெயர்களை அறிவிப்போம். அதற்கான உரிமை எமக்கு மாத்திரமே காணப்படுகிறது என சுகாதாரத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-பெரும்பாலான உள்ளூராட்சிமன்றங்களில் நாமே வெற்றி பெற்றுள்ளோம். 266 உள்ளூராட்சி மன்றங்கள் என்பது பெரும்பான்மையையே குறிக்கின்றது. இவற்றில் 150 இற்கும் அதிகமான சபைகளின் தலைவர்கள், உப தலைவர்கள், நகர பிதாக்கள், உப நகர பிதாக்கள், மாநகரமேயர்கள், உப மாநகரமேயர்கள் உள்ளிட்டோரை எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் நாம் பெயரிடுவோம். அதற்கான உரிமை எமக்கே காணப்படுகிறது.

குறித்த சபைகளில் 50 வீதம் அல்லது அதற்கு அதிகமான உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்தியிலிருந்தே தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெற்றுள்ளதாகக் கூறப்படும் 14 சபைகளில் ஒன்றுக்கான பதவிகளுக்கான பெயர்களைக் கூட அவர்களால் 19ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்க முடியாது.

காரணம் அவற்றில் ஒரு சபையில் கூட ஐக்கிய மக்கள் சக்திக்கு 50 வீதம் இல்லை. அத்தோடு இவற்றில் 4 சபைகளில் நாமும் ஐக்கிய மக்கள் சக்தியும் பெற்றுக் கொண்ட ஆசனங்கள் சமமாகும்.

எதிர்க்கட்சிகள் ஆட்சியமைக்கும் சபைகளில் அவர்கள் வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்து காண்பிக்கவேண்டும். ஆனால் ஒவ்வொரு கட்சிகளிலும், சுயாதீன குழுக்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களால் அவ்வாறு செயற்பட முடியும் என்று நாம் நம்பவில்லை.

எமக்கு வாக்குகள் குறைவடைந் திருக்கின்றதெனில், எதிர்க்கட்சிக்கு அதிகரித்திருக்க வேண்டுமல்லவா? எனவே அரசாங்கத்துக்கு வாக்குகள் குறைந்திருப்பதாக எதிர்க்கட்சிகள் முன்னெடுக்கும் பிரசாரங்கள் அடிப்படையற்றவை-என்றார். (அ)

# மேன்முறையீட்டு நீதிமன்றில் இரண்டு பதவி வெற்றிடங்கள்!

## நால்வரின் பெயர்கள் பரிந்துரை

கொழும்பு, மே. 16

தற்போது விடுமுறையில் இருக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன எதிர்வரும் ஜூன் மாதம் 16ஆம் திகதி 63 வயது பூர்த்தியாவதன் காரணமாக பதவியில் இருந்து ஓய்வு பெறவுள்ளார்.

அத்துடன், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவராக இருக்கும் நீதியரசர் லபார் தாஹிரும் ஜூன் மாதம் 18ஆம் திகதியுடன் 63 வயதைப் பூர்த்தி செய்து பதவியில் இருந்து ஓய்வு பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த இரண்டு வெற்றிடங்களையும் நிரப்ப ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் நான்கு பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிராங்க் குணவர்தன, ஆதித்ய குமார பட்டபெந்தி மற்றும் நவரட்ண மாரசிங்க ஆகியோரின் பெயர்களை பிரதம நீதியரசர் முர்து பெர்னாண்டோ இரண்டு சந்தர்ப்பங்களில் முன்மொழிந்துள்ளார்.

இதற்கிடையில், சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க, பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ரியாஸ் பாரியின் பெயரை முன்மொழிந்துள்ளார். (அ)

# சுரங்க தொழிலாளர்களுக்கு காப்புறுதி

கொழும்பு, மே. 16

சுரங்கத் தொழிலாளர்களுக்கான புதிய காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்துவதாக கமநலக் காப்புறுதிச் சபை அறிவித்துள்ளது.

சுரங்கத் தொழிலாளர்களுக்கு ஆண்டு தோறும் விபத்து காப்புறுதி வழங்கப்படும் என்று கமநலக் காப்புறுதிச் சபை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஏனைய காப்பீட்டு நிறுவனங்கள் வழங்குவதை விட, சுரங்கத் தொழிலாளர்களுக்கு சலுகை காப்புறுதிகள் வழங்கப்படும் என்று அது மேலும் கூறுகிறது. (அ)

# புலி ஆதரவாளர்களுக்கு உத்வேகமளிக்கும் அநுர!

## சாடுகிறது பொதுஜன பெரமுன

கொழும்பு, மே. 16

தமிழ் இனப்படுகொலையை ஏற்றுக்கொள்ளாத இலங்கையர்கள் கனடாவில் இருந்து கொழும்புக்கு அனுப்பப்படுவார்கள் என்று பிரம்டன் நகர மேயர் குறிப்பிட்டுள்ளமை பாரதூரமானது. தமிழ் இனப்படுகொலை என்பது அடிப்படையற்ற குற்றச்சாட்டு. கனடாவில் வாழும் விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆதரவாளர்களுக்கு உத்வேகமளிக்கும் வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் நிர்வாகம் அமைந்துள்ளது என்று பொதுஜன பெரமுனவின் ஊடக பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-கனடாவில் பிரம்டன் நகரில் சிங்கௌசி பொதுப் பூங்காவில்விடுதலைப்புலிகள்அமைப்பை நினைவு கூரும் வகையில் நினைவுத்தூபி ஒன்று நிர்மாணிக்கப்பட்டு, கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதற்கு இந்த அரசாங்கம் மறைமுகமாக ஒத்துழைப்பு வழங்கியுள்ளது என்றே குறிப்பிடவேண்டும்.

அத்துடன் இலங்கையில் தமிழ் இன அழிப்பு படுகொலை இடம்பெற்றதாகக் குறிப்பிடும் குற்றச்சாட்டு அடிப்படையற்றது. ஆகவே இவ்வாறான செயற்பாடுகள் இலங்கையின் தேசிய நல்லிணக்க உறுதிப்பாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று கனேடிய வெளிவிவகாரத்துறை அமைச்சிடம் இலங்கை சார்பில் அப்போதைய வெளிவிவகாரத்துறை அலி சப்ரி முறைப்பாடு அளித்திருந்தார்.

நினைவுத்தூபி அமைக்கும் பணிகள் கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆட்சிக்கு வந்ததன் பின்னர் புலம்பெயர்ந்து வாழும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் உத்வேக மடைந்துள்ளார்கள். ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் கடனா சென்றிருந்தபோது புலிகள் அமைப்பின் ஆதரவாளர்களுடன் நெருக்கமாக செயற்பட்டுள்ளார்-என்றார். (அ)

# எமது கட்சி உறுப்பினர்களிடம் பணத்துக்கு பேரம் பேசும் அரசு!

## அஜித் பெரேரா குற்றச்சாட்டு



கொழும்பு, மே. 16

அரசாங்கம் ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களின் ஆதரவுடன் உள்ளூராட்சிமன்றங்களில் ஆட்சியமைப்பதற்கான முயற்சிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களிடம் பணம் உட்பட ஏனைய சிறப்புரிமைகள், விசேட சலுகைகளை முன்வைத்து அரசாங்கத்தால் இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் மக்கள் வழங்கியுள்ள தீர்ப்பை அரசாங்கம் இன்னும் உணரவில்லை. மேலும் சில மாதங்கள் சென்ற பின்னர் அரசாங்கத்துக்கு இந்த நிலைமை மேலும் மோசமடையும். இந்த யதார்த்தத்தை புரிந்து கொண்டு அரசாங்கம் இனியாவது மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி நிலைநாட்டப்படும் என வழங்கப்பட்ட வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அரசாங்கத்தால் தாம் பாரியளவில் ஏமாற்றப்பட்டிருக்கின்றோம் என்பதை இன்று பெரும்பாலானவர்கள் புரிந்து கொண்டுள்ளனர். இவ்வாறான நிலைமையிலும் கூட 43 வீதமான மக்கள் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்து அவர்களுக்கு வாக்களித்திருக்கின்றனர்.

இதனை வெற்றி என அரசாங்கம் கூறிக் கொண்டாலும், அந்த வெற்றியின் பலம் குறைவடைந்துள்ளது என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றோம். 5 ஆண்டுகள் ஆட்சி புரிய வேண்டுமெனில், மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமெனில், மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற வேண்டுமெனில் அரசாங்கம் இதனை விட அர்ப்பணிப்புடனும் உத்வேகத்துடனும் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

குறிப்பாக வடக்கு, கிழக்கில் அரசாங்கம் படுதோல்வியடைந்துள்ளது. தெற்கு மற்றும் மேல் மாகாணங்களில் நினைத்தளவு வெற்றியைப் பெற்றுக் கொள்ள முடியாமல் அரசாங்கத்துக்கு வாக்களித்த மக்களும் செல்ல இடமின்றி தவித்துக் கொண்டிருக்கின்றனர். இந்த தேர்தலில் அரசாங்கத்துக்கு மாத்திரமின்றி எதிர்க்கட்சிகளுக்கும் மக்கள் ஒரு செய்தியை வழங்கியிருக்கின்றனர்.

அந்த வகையில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் கொள்கை ரீதியில் ஒன்றிணைய வேண்டும் என மக்கள் வலியுறுத்தியிருக்கின்றனர்-என்றார். (அ)

# இவ்வாண்டு இதுவரையான காலத்தில் 19,900ஐ கடந்த டெங்கு நோயாளர்கள்!

கொழும்பு, மே. 16

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 19,900 ஐ கடந்துள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, கடந்த இரண்டு வாரங்களில் மாத்திரம் 2,178 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்திலேயே அதிகபட்சமாக 640 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

குறித்த காலப்பகுதியில் இரத்தினபுரி மாவட்டத்தில் 386 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அத்துடன், இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு நோயினால் ஏழு பேர் உயிரிழந்தனர்.

இதனிடையே, டெங்கு நுளம்புகள் பரவுவதைக் கட்டுப்படுத்தும் வகையில், எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை விசேட நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் பிரகடனப் படுத்தப்படவுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர், விசேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். (அ)

# இந்தியாவிலிருந்து அடுத்த வாரம் இலங்கைக்கு வருகின்றது உப்பு!

கொழும்பு, மே. 16

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 20,000 மெற்றிக் தொன் உப்புக்கான முதல் தொகுதி அடுத்த வாரம் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படவுள்ளதாக இலங்கை உப்பு நிறுவனத்தின் தலைவர் டி.நந்தனதிலகா தெரிவித்துள்ளார்.

தேசிய உப்பு நிறுவனம் இறக்குமதி செய்த உப்பு கையிருப்பில் ஒரு பகுதியை வாங்கி மக்களுக்காக உப்பு சந்தைக்கு வெளியிட தனது நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கூறிய தலைவர் நந்தனதிலகா, லங்கா உப்பு நிறுவனம் இந்தியாவிலிருந்து 10,000 மெற்றிக் தொன் உப்பையும் இறக்குமதி செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், நேற்று முன் தினம் லங்கா உப்பு நிறுவனம் 400 கிராம் கொண்ட ஒரு இலட்சம் உப்பு பைக்கெற்றுக்களை லங்கா சதோசவுக்கு வழங்கியதாகத் தலைவர் டி. நந்தனதிலகா தெரிவித்தார். (அ)

# இந்திய எக்ஸிம் வங்கியுடன் இலங்கை அரசு இணக்கப்பாடு

## கடன் மறுசீரமைப்பு செயன்முறையின் கீழ்



கொழும்பு, மே. 16

கடன் மறுசீரமைப்பு செயன்முறையின் கீழ் இலங்கை அரசாங்கம் மற்றும் இந்தியாவின் எக்ஸிம் வங்கி இடையே இரு தரப்பு திருத்தப்பட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

கடன் வசதி மற்றும் கடன் பெறுவதற்கான வசதி தொடர்பிலேயே இந்த இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படுகின்றமை இலங்கையின் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டில் முக்கியமான நடவடிக்கையாக அமையுமென நிதியமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 25ஆம் திகதி மற்றும் கடந்த 3ஆம் திகதிகளில் இந்த இரு தரப்பு திருத்தப்பட்ட உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இதனூடாக இந்திய அரசாங்கத்துடன் 930.8 மில்லியன் டொலர் பெறுமதியான 8 கடன் வசதிகள் மற்றும் 4 கொள்வனவு கடன் வசதிகள் தொடர்பான உடன்படிக்கைகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. (அ)

# கொழும்பு மாநகர சபையின் மேயர் பிரதி மேயரை நியமிக்க வாக்கெடுப்பு

கொழும்பு, மே. 16

கொழும்பு மாநகர சபையின் மேயர் மற்றும் பிரதி மேயரை நியமிப்பதற்கான வாக்கெடுப்பை நடத்துவதற்கு உள்ளூராட்சி ஆணையாளர் தீர்மானித்துள்ளார். அதற்கமைய, இந்த வாக்கெடுப்பு எதிர்வரும் ஜூன் 02 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு தனிக் கட்சியும் நூற்றுக்கு 50 வீதத்துக்கு அதிக வாக்கு வீதத்தை பெற்றுக்கொள்ளாமையின் காரணமாகவே வாக்கெடுப்பொன்றை நடத்த நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# உரம் மோசடி தொடர்பில் கைதான 12 பேர் மறியலில்

கொழும்பு, மே. 16

உர மோசடி தொடர்பில் பொலனறுவை குற்றத் தடுப்பு விசாரணை பணியக அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட 12 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அம்மோனியா உரத்தை யூரியா உரம் என்று கூறி, அதிக விலைக்கு விற்பனை செய்ய உதவிய 12 சந்தேக நபர்கள் சிறிபுர நகரில் விவசாய உரங்கள் மற்றும் விவசாயப் பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனத்தில் கடந்த 13 ஆம் திகதி நடத்தப்பட்ட சோதனையின்போது பொலனறுவை குற்றத் தடுப்பு விசாரணை பணியக அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நேற்று முன் தினம் தெஹியத்தகண்டிய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 38 பேர் சிக்கினர்!

கொழும்பு, மே. 16

ஏப்ரல் 21 முதல் 28 வரை நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின்போது, சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 38 நபர்கள் கைது செய்யப்பட்டுச் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டனர்.

இலங்கைக் கடற்படை, மீன்வள புலனாய்வு அலுவலகத்துடன் இணைந்து, கட்டைக்காடு, புதுமாத்தளன், திருகோணமலை, கொக்கிளாய், சேப்பல் தீவு ஆகிய கடலோர மற்றும் கடல் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் போது இந்த சந்தேக நபர்களைக் கைது செய்தது.

இந்த மீனவர்கள் மின்சார விளக்குகள் மற்றும் சட்டவிரோத வலைகளைப் பயன்படுத்தி சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

இந்த நடவடிக்கைகள் வெற்றிலைக்கேணி கடற்படை நிலையம், இலங்கை கடற்படைக் கப்பல்களான கோட்டாபய, பரகும்பா, விஜயபா, கடற்படை கப்பல்துறை மற்றும் மீன்வள ஆய்வு அலுவலகங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

38 சந்தேக நபர்களுடன் 08 சட்டவிரோத வலைகள், 12 டிங்கிப் படகுகள் மற்றும் மின் விளக்கு உபகரணங்களை கடற்படை மீட்டுள்ளது.

மேலும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிண்ணியா, திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள மீன்வள ஆய்வாளர் அலுவலகங்களில் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# வர்த்தக நிலையத்தை சோதனையிட்ட அதிகாரிகளை தாக்கிய இருவர் கைது!

கொழும்பு, மே. 16

குருநாகல் - கொகரெல்ல பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றைச் சோதனையிடுவதற்குச் சென்ற நுகர்வோர் விவகார அதிகார சபையின் அதிகாரிகள் இருவர் அச்சுறுத்தப்பட்டுத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தத் தாக்குதலைக் குறித்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் மற்றும் அவரது மகன் ஆகியோர் நடத்தினர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட வர்த்தக நிலையத்தின் உரிமையாளர், தற்போதும் சேவையில் இருக்கும் பொலிஸ் அதிகாரி என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# எரிபொருள் நிரப்பு நிலையங்களில் சுகாதார வசதி வழங்க நடவடிக்கை

கொழும்பு, மே. 16

பொது மக்களின் சுகாதார பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் நாடளாவிய ரீதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முதன்மை சுகாதார பாதுகாப்பு வசதிகளை வழங்கும் தேசிய மட்ட வேலைத்திட்டம் நேற்று முன் தினம் ஜனாதிபதி செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதன்படி "கிளீன் சிறிலங்கா" ஜனாதிபதி செயலணி, வலுசக்தி அமைச்சு மற்றும் நாட்டின் நான்கு பிரதான எரிபொருள் விநியோகஸ்தர்களான, இலங்கை கனிய வள கூட்டுத்தாபனம், லங்கா ஐ.ஓ.சி., சினொபெக் மற்றும் ஆர்.எம். பார்க்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இதன்போது கைச்சாத்திடப்பட்டன.

அதன்படி மூன்று வருட காலத்துக்குள் பொதுமக்களுக்காக நவீன சுகாதார பாதுகாப்பு வசதிகளுடன் கூடிய 540 இடங்களை அமைக்க எதிர்பார்க்கப்படுகிறது. அவற்றில் 100 இடங்களை 2025 ஆம் ஆண்டுக்குள் முழுமைப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

சபைகளில் கூட்டாட்சி

# ரணில் தலைமையில் எதிரணிகள் சங்கமம்!

கொழும்பு, மே. 16

ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மை பலத்தை பெறாத உள்ளூராட்சிச் சபைகளில் எதிரணிகள் ஒன்றிணைந்து ஆட்சியமைப்பது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலை மையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவும் பங்கேற்றுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன, தமிழ் முற்போக்கு கூட்டணி, சுதந்திரக்கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், பிவிதுரு ஹெல உறுமய என்பவற்றின் பிரதிநிதிகளும் இச்சந்திப்பில் பங்கேற்றுள்ளனர்.

இதன்போது எதிரணிகள் ஒன்றிணைந்து சபைகளில் ஆட்சியமைப்பதெனவும், தேசிய அரசியலின்போதும் கூட்டு எதிரணியாக செயற்படுவதெனவும் இணக்கம் காணப்பட்டது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. (அ)

# பல திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய ஒருவர் கைது!

கொழும்பு, மே. 16

யக்கல பொலிஸ் பிரிவில் நடந்த பல திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை யக்கலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர், மல்வது ஹிரிபிட்டிய - வரபலான பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார். யக்கல பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவுக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து, நேற்று முன் தினம் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் வரபலான பகுதியைச் சேர்ந்த 27 வயதுடையவர் என தெரிய வந்துள்ளது. (அ)

# தெமட்டகொடை கொலை; 4 சந்தேக நபர்கள் கைது!

கொழும்பு, மே. 16

தெமட்டகொடைப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை நபர் ஒருவரை பொல்லால் தாக்கிக் கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் நால்வர் நேற்று காலை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் 17 - 21 வயதானவர்கள் எனவும், பொரளை மற்றும தெமட்டகொடைப் பகுதிகளை சேர்ந்தவர்கள் எனவும் தெரிய வந்துள்ளது. தெமட்டகொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# ஐஸ் கடத்தலில் ஈடுபட்ட அதிகளவானோர் கைது!

கொழும்பு, மே. 16

பதில் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கு அமைய முன்னெடுக்கப்படும் போதைப் பொருள் சுற்றிவளைப்பு நடவடிக்கையில், ஐஸ் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட அதிகளவிலானோர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதனடிப்படையில் 81 கிராம் 763 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 84 பேரும், 200 கிராம் 736 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் 123 பேரும், 14 கிலோ கிராம் 10 கிராம் கஞ்சா போதைப்பொருளுடன் 90 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (அ)

# இலங்கையில் மிகவிரைவில் தாதியர் பல்கலைக்கழகம்!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உறுதி



கொழும்பு, மே. 16

**நாட்டில் மிக விரைவில் தாதியருக்கான பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படும் என சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்று நாரஹேன்பிட்டி அபயாராம விகாரையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இலங்கையில் தாதியர் பல்கலைக்கழகமொன்று நிர்மாணிக்கப்படவேண்டும் என்பதில் அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் மிகவும் கடுமையான முன்னெடுப்புகளை மேற்கொண்டிருந்தார்.

தற்போதைக்கு தாதியர் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான சாத்தியம், அதன் சாதக, பாதகங்கள் குறித்து கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மிக விரைவில் பல்கலைக்கழகம் ஒன்றைத் ஸ்தாபிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

இந்நாட்டின் சுகாதார நிலையை மேம்படுத்த எதிர்வரும் நாட்களில் பல்வேறு பிரதேசங்களை மையப்படுத்தி 100 ஆரம்ப சுகாதார நிலையங்களை நிறுவவும் உத்தேசித்துள்ளோம் -என்றார். (அ)

# முழு நாட்டு மக்களும் அரசுக்கு எச்சரிக்கை!

## கூறுகிறது ஐக்கிய தேசிய கட்சி



கொழும்பு, மே. 16

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் பெரும்பான்மை பலத்தை பெற்றுக்கொண்டுள்ள சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பில் அனைத்து கட்சிகளுடனும் கலந்துரையாடி வருவதாகவும் எதிர்வரும் சில தினங்களில் அது தொடர்பிலான தமது நிலைப்பாடு அறிவிக்கப்படும் எனவும் ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தலில் கூட்டு எதிர்க்கட்சிகள் பெரும்பான்மை பெற்றுள்ள சபைகளில் ஆட்சியமைப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவு தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 45 இலட்சத்து 3 ஆயிரத்தி 930 வாக்குகளைப் பெற்றிருந்தாலும், அரசாங்கத்திற்கு எதிராக 59 இலட்சத்து 6 ஆயிரத்தி 880 வாக்குகளை மக்கள் அளித்துள்ளனர் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

தற்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொண்ட ஒரு அரசாங்கம், ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்று ஆறு மாதங்களுக்குப் பிறகு, வரலாற்று தோல்வியைப் பதிவு செய்துள்ளது.

முழு இலங்கை மக்களும் இதன் மூலம் அரசாங்கத்துக்கு எச்சரிக்கையான செய்தியைக் கொடுத்துள்ளனர் என்றே நினைக்கிறேன்.

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ளூராட்சி மன்றங்களில் 50 வீத வாக்குகளைப் பெற அரசாங்கம் தவறியுள்ளது.

இதற்கு முக்கிய காரணம் பொய்கள் அல்லது தவறான தகவல்களை சமூகமயமாக்குவதன் இறுதி விளைவு - என்றார்.

# ஆட்சி செய்வதற்கான ஆணை எதிர்க்கட்சிகளுக்கு கிடையாது

## ஜனாதிபதி அநுரகுமார



கொழும்பு, மே. 16

எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்வதற்கான ஆணையை கொண்டிருக்கவில்லை என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்திக்கு வழங்கப்பட்ட பொது ஆணையை அபகரிக்க எடுக்கப்படும் எந்தவொரு முயற்சியும் கடுமையான நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் 60ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றியபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-267 உள்ளூராட்சி மன்றங்களை நிர்வகிக்க தேசிய மக்கள் சக்தி ஆணையைப் பெற்றுள்ளது.

இதன் அடிப்படையில் முதலில் 152 உள்ளூராட்சி மன்றங்களிலும், மீதமுள்ள 115 உள்ளூராட்சி மன்றங்களிலும் விரைவில் கட்டுப்பாட்டை நிறுவ திட்டமிட்டுள்ளோம்.

எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்வதற்கான ஆணையை கொண்டிருக்கவில்லை.

இந்தநிலையில் பொது ஆணையை எதிர்த்து உருவாக்கப்படும் எந்தவொரு சபையும் மூன்று முதல் நான்கு மாதங்களுக்கு மேல் நீடிக்காது.

பாராளுமன்றத்தில் எமது கட்சிக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருப்பதை நினைவூட்ட விரும்புகின்றேன்.

நாம் பிற அரசியல் வாதிகளை போல எம்மை வளப்படுத்திக்கொள்ளவும் எம்மைச் சுற்றியுள்ள உறவினர் நண்பர்களை மாத்திரம் வளப்படுத்திக்கொள்ளவும் ஆட்சிக்கு வரவில்லை.

நாட்டின் மீதுள்ள பற்றினாலும் நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்ற அதீத ஆசையிலும் தான் பல போராட்டங்களின் பின்னர் இந்த ஆட்சியை மக்கள் ஆணையுடன் அமைத்திருக்கின்றோம்-என்றார். (அ)

# இரு வலம்புரி சங்குகளுடன் நால்வர் கைது

கொழும்பு, மே. 16

விற்பனைக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த இரண்டு வலம்புரிச் சங்குகளுடன் நான்கு சந்தேக நபர்கள் ஜா-எல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜா-எல பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழு ஒன்றுக்கு, கிடைத்த இரகசிய தகவலின் பேரில், ஜா-எல நகரில் சோதனை நடத்தி 1 மில்லியன் ரூபாவுக்கு விற்கத் தயாராக இருந்த 02 வலம்புரி சங்குகளுடன் 04 சந்தேக நபர்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் எல்பிட்டிய, பதுகிரிய மற்றும் அம்பாந்தோட்டை பகுதிகளில் வசிப்பவர்கள் என்றும், அவர்கள் 23 முதல் 26 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ)

# கடந்த ஐந்து மாதங்களில் மட்டும் வீதி விபத்துக்களில் 965 பேர் பலி!

கொழும்பு, மே. 16

இந்த ஆண்டு முழுவதும் பதிவான வீதி விபத்துக்களில் மொத்தம் 965 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் மே 13 ஆம் திகதி வரை நாடு முழுவதும் வீதி விபத்துகளில் இந்த இறப்பு எண்ணிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்தக் காலகட்டத்தில், 902 போக்குவரத்து விபத்துகளும் பதிவாகியுள்ளன. இதன்போது, 1,842 பேர் கடும் காயங்களுக்கு உள்ளாகியும் உள்ளனர்.

கவனக்குறைவாக வாகனம் ஓட்டுதல், பொறுப்பற்ற முறையில் வாகனம் ஓட்டுதல் மற்றும் முறையற்ற வாகன பராமரிப்பு ஆகியவை பல விபத்துகளுக்குக் காரணம் என்று பொலிஸார் கூறினர்.

போக்குவரத்து விபத்துகளைக் குறைப்பதற்காக நாடு முழுவதும் ஒரு சிறப்புத் திட்டத்தை செயல்படுத்த பொலிஸார் திட்டமிட்டுள்ளனர்.

மேலும் அதன் கீழ் சாரதி விழிப்புணர்வு திட்டங்களும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளன.

(அ)

# பொதுப் போக்குவரத்து பஸ்களை இறக்குமதி செய்ய பல நிபந்தனை



கொழும்பு, மே. 16

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் பொதுப் போக்குவரத்து பஸ்களை இறக்குமதி செய்வதற்கு பல நிபந்தனைகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், பாதுகாப்பான மற்றும் நவீனமான பஸ்களை மட்டுமே இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படும் என்று கூறினார்.

பொதுப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் நிர்ணயிக்கப்பட்ட தர நிலைகளின் கீழ் இயங்குகின்றனவா என்பதை ஆராயும் பணிகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டார். (அ)

# கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஒத்துழைக்க உறுதியளிக்கவில்லை!

## திலும் அமுனுகம விளக்கம்



கொழும்பு, மே. 16

கொழும்பு மாநகர சபையில் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளிக்கவில்லை என சர்வஜன அதிகாரம் கட்சியின் தேசிய அமைப்பாளர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தியின் பொய் மற்றும் வெறுப்பூட்டும் கருத்துக்களை நாட்டு மக்கள் விளங்கிக் கொண்டுள்ளார்கள்.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 7 மாத காலத்துக்குள் 23 இலட்சம் வாக்கை இழப்பது சாதாரணதொரு விடயமல்ல.

அரசாங்கத்தின் மீதான மக்களின் நம்பிக்கை வெகுவாக குறைவடைந்துள்ளது.

பெரும்பான்மை பலம் உள்ளது என்ற காரணத்தால் தான்தோன்றித்தனமாக பேசுவதை ஆளும் தரப்பின் முன்னிலை உறுப்பினர்கள் இனியாவது தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

மக்களை மூடர்கள் என நினைத்துக் கொண்டு ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடும் ஒவ்வொரு கருத்துக்களும் அரசாங்கத்தின் வாக்கு வங்கியை பலவீனப்படுத்தும்.

தனித்த பெரும்பான்மையுடன் கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைக்க முடியாத நிலை தேசிய மக்கள் சக்திக்கு ஏற்பட்டுள்ளது.

இதுவே அரசாங்கத்தின் பலவீனத்தை எடுத்துக்காட்டுகிறது.

கொழும்பு மாநகர சபையில் கூட்டிணைந்து ஆட்சியமைப்பது தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஏனைய அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

கொழும்பு மாநகர சபையில் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளிக்கவில்லை.

ஒத்துழைப்பை கோருவதற்கு முன்னர் ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும்.முன்வைக்கப்படும் கொள்கை திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு ஒத்துழைப்பு வழங்குவது குறித்து ஆராய்வோம்-என்றார். (அ)

# அம்ஷிகாவுக்கு நீதி வேண்டும் ஆசிரியரை தண்டிக்க வேண்டும்

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

கல்முனை, மே 16

**மாணவி அம்ஷிகாவின் மரணத்துக்குக் காரணமான ஆசிரியர் தண்டிக்கப்பட வேண்டும். மாணவிக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க ஆலோசகர் தா. பிரதீபன் தெரிவித்தார்.**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை நற்பிட்டிமுனையில் அமைந்துள்ள அம்பாறை மாவட்ட பிராந்தியக் காரியாலயத்தில் நேற்றுக்காலை முறைப்பாடு ஒன்றை செய்த பின்னர் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த மாதம் 29 ஆம் திகதி கொழும்பு கொட்டாஞ்சேனை பிரதேசத்தின் தொடர் மாடி குடியிருப்பு ஒன்றின் 6ஆவது மாடியிலிருந்து விழுந்து உயிரை மாய்த்துக் கொண்ட அம்ஷிகா எனும் மாணவியின் மரணத்துக்குக் காரணமான ஆசிரியர் தண்டிக்கப்பட வேண்டும்.

தனக்கு நேர்ந்த அவலம் பற்றி பாடசாலை நிர்வாகத்திடம் மாணவி முறையிட்டபோதும் அது பாடசாலையின் நற்பெயருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் எனக் கருதி, தட்டிக் கழித்து மாணவியை மன உளைச்சலுக்குள்ளாக்கிய அந்தப் பாடசாலை நிர்வாகமும் கூட இந்த மாணவியின் மரணத்துக்கு பதில் கூற வேண்டும்- என்றார். (எ)



# காரைதீவு சந்தைக்கு முன் முள்ளிவாய்க்கால் கஞ்சி

காரைதீவு, மே 16

முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கான நினைவேந்தலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலும் அம்பாறை, காரைதீவு பொதுச் சந்தைக்கு முன்பாக நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது இறுதி யுத்தத்தில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதோடு முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கப்பட்டது. (எ)



# முன்னணியால் முள்ளிவாய்க்கால் கஞ்சி

திருக்கோவில், மே 16

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட அமைப்பாளர் துஷானந்தன் தலைமையில் நேற்று முன்தினம் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

கடந்த 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற தமிழின அழிப்பின் போது மிஞ்சிய தமிழர்களின் உயிர்களை காப்பதற்காக உப்பில்லா கஞ்சி வழங்கப்பட்டது. இந்தத் துயரத்தை நினைவுகூரும் வகையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டு வருகிறது. (எ)

### வீடுகள் இன்னும் வழங்கப்படவில்லை

# அக்கரைப்பற்றில் சுனாமியால் பாதிக்கப்பட்டோர் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

அக்கரைப்பற்று, மே 16

சுனாமி தாக்கி 20 வருடங்கள் கடந்துவிட்டது. இலங்கையில் பாதிப்புற்ற அனைத்து பிரதேசங்களிலும் பாதிப்புற்றோர்களுக்கு நியாயமான அடிப்படையில் இழப்புகள் ஈடுசெய்யப்பட்டு விட்டன. குறிப்பாக சுனாமி பாதுகாப்பு எல்லைக் குட்பட்டவர்களுக்கு அந்தந்த பிரதேசங்களில் பாதுகாப்பான இடங்களில் குடியிருப்புக்கான வீடுகள் நிர்மாணித்து வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அக்கரைப்பற்று பிரதேசத்தில் மாத்திரம் நுரைச்சோலை அரச காணியில் அமைக்கப்பட்ட வீடுகளை சுனாமியால் பாதிப்புற்று வீடுகள் முழுமையாக சேதமடைந்த மக்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை என அக்கரைப்பற்றில் சுனாமியால் பாதிப்புற்றோர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் நேற்று கல்முனை பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாட்டினை செய்வதற்கு சென்ற பாதிப்புற்றோர் சங்கத் தலைவர் ஐ.எல்.ஏ. குத்தூஸ் கூறுகையில், 15 வருடங்களுக்கு முன்னர் வீடமைப்பு அமைச்சராக இருந்த திருமதி பேரியல் அஷ்ரப்பின் அயராத முயற்சியில் எங்களுக்காக சவுதி நாட்டு நிதியைக் கொண்டுவந்து நிர்மாணித்து முடிக்கப்பட்டது இந்த வீடுகளை வழங்க ஆயத்தமான



போது, பேரினவாதங் கொண்ட சில இனவாதிகளாலும், இன்னும் சிலருடைய சுயநல அரசியல் இலாபங்களுக்காகவும் அக்கரைப்பற்று மக்களுக்கு இந்த வீடுகளை வழங்கக்கூடாது என திட்டமிட்டு தடுக்கப்பட்டது- என்றார்.

குறித்த வீட்டுப் பிரச்சினையை முழுமுதாக கேட்டறிந்த ஆணையாளர்,

"15 ஆண்டுகளுக்கும் அதிகமாக நடைமுறைப்படுத்த முடியாதுள்ள தீர்ப்பு ஒன்று தொடர்பில் உச்ச நீதிமன்றத்துக்கு பரிந்துரை ஒன்றை எழுதிக் கோரும் இயலுமை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு உண்டு. எனவே, பாதிப்புற்ற மக்களுடைய முறைப்பாடு இருக்குமிடத்து ஆணைக்குழுவால் குறித்த நடவடிக்கையை எடுக்க முடியும்"-என்றார்.

அந்த அடிப்படையில், சுனாமியால் பாதிப்புற்று இதுவரை வீடுகள் கிடைக்காதவர்களும் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் சுனாமி வீட்டுத்திட்டப் பயனாளிகள் பட்டியலில் உள்ளவர்களில் 78 பேர் ஒப்பமிட்ட முறைப்பாட்டை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய அலுவலகத்தில் இணைப்பாளர் அப்துல் அஸீஸிடம் கையளித்தனர். (எ)

# ஓட்டமாவடியில் வீட்டிலிருந்து பெண் ஒருவரின் சடலம் மீட்பு

வாழைச்சேனை, மே 16

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடியில் உள்ள வீடொன்றிலிருந்து பெண்ணின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி, முதலாம் வட்டாரத்தில் உள்ள பஸார் பள்ளிவாசல் வீதியைச் சேர்ந்த 55 வயது பெண்ணே அவரது வீட்டில் உயிரிழந்த தாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், பெண்ணின் மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளில் வாழைச்சேனை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# கிராமத்துக்குள் புகுந்து யானைகள் அட்டகாசம்

திருகோணமலை, மே 16

திருகோணமலை மாவட்டம் மூதூர் - தோப்பூர் -அப்ரார் நகர் கிராமத்துக்குள் நேற்று முன்தினம் அதிகாலை நுழைந்த காட்டு யானைகள் பெரும் அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளன.

இதன்போது தென்னைகள், வாழைகள் உள்ளிட்ட பயன்தரும் மரங்களையும் சொத்துக்களையும் காட்டு யானைகள் சேதப்படுத்தியுள்ளன.

மேலும், வீட்டு சுற்று வேலித் தூண்களையும் உடைத்து சேதப்படுத்தின.

இதேவேளை, காட்டு யானைகளின் அட்டகாசத்தால் வீடுகளில் இருக்கவும் அச்சமாகவுள்ளதாகவும் கிராம மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.



எனவே, இது தொடர்பில் உரிய தரப்பினர் நடவடிக்கை மேற்கொண்டு யானை பாதுகாப்பு வேலி அமைத்துத் தருவதோடு பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈட்டினை பெற்றுத் தர வேண்டும் எனவும் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# திருமலை மாவட்ட செயலகத்தில் களைகட்டியது வெசாக் நிகழ்வு

திருகோணமலை, மே 16

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் வெசாக் தினத்தை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட செயலாளர் ஜி. எம். ஹேமந்த குமார தலைமையில் நேற்று முன்தினம் மாலை வெசாக் நிகழ்வு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

பக்தி கீதம் இசைக்கும் நிகழ்வில் பங்குபற்றியவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய உத்தியோகத்தர்கள் பலரும் இந்த பக்தி கீத நிகழ்வில் பங்குபற்றினர்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே. எஸ். அருள்ராஜ், மேலதிக மாவட்ட செயலாளர் எஸ். சுதாகரன், அரச உயரதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# இஸ்ரேலின் வான்வழி தாக்குதலில் 22 குழந்தைகள் உட்பட 48 பேர் பலி!

## காஸாவில் தொடரும் சோகம்



காஸா, மே 16

**வடக்கு காஸாவில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் 22 குழந்தைகள் உட்பட 48 பேர் உயிரிழந்தனர்.**

காஸா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாதத் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலிலிருந்து 251 பேரை பணயக் கைதிகளாக காஸா முனைக்கு ஹமாஸ் அமைப்பினர் கடத்திச் சென்றனர்.

இதையடுத்து, ஹமாஸ் அமைப்பு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காஸா முனையில் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதேவேளை, பணயக் கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும் இராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது.

ஹமாஸ் அமைப்பினர் தங்கள் வசமிருந்த பணயக் கைதியான இஸ்ரேல் வாழ் அமெரிக்கர் இடன் அலெக்சாண்டர் என்பவரை விடுதலை செய்தனர். இதே சமயம் போரை நிறுத்துவதற்கான வாய்ப்பே இல்லை என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு திட்டவட்டமாக தெரிவித்தார்.

இந்த நிலையில், வடக்கு காஸாவில் நேற்று முன்தினம் இஸ்ரேல் இராணுவம் வான்வழித் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் 22 குழந்தைகள் உட்பட 48 பேர் உயிரிழந்ததாக காஸாவில் உள்ள மருத்துவமனை தகவல் தெரிவித்துள்ளது. காஸாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் இதுவரை 52 ஆயிரத்து 600இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். (எ)

# "விமானத் தளங்களை அழித்தது இந்தியாவுக்கு கிடைத்த வெற்றி"

புதுடில்லி, மே 16

பாகிஸ்தான் விமானத் தளங்கள் அழிக்கப்பட்டமை இந்தியாவுக்கு கிடைத்த தெளிவான வெற்றியாகும் என்று போர் நிபுணர் ரொம் கூபர் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரியாவைச் சேர்ந்த போர் நிபுணர் ரொம் கூபர், மத்திய கிழக்கு, ஆபிரிக்கா, தெற்கு ஆசிய நாடுகளில் இடம்பெற்ற போர் குறித்து பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதி பிரபலம் அடைந்தவர். அவர் இந்தியா - பாகிஸ்தான் போர் பற்றி எழுதியுள்ள கட்டுரையில் கூறியதாவது:

இந்தியா - பாகிஸ்தான் இடையே சமீபத்தில் நடைபெற்ற மோதலை மேற்கத்திய ஊடகங்கள் தவறாகப் புரிந்து கொண்டன. அவைகள் போர்கள நிலவரத்தை அறியாமல் மாறுபட்ட தகவல்களை தெரிவித்தன.

கடந்த வாரம் பாகிஸ்தான் பகுதிக்குள் இந்தியா ஊடுருவி துல்லியத் தாக்குதல் நடத்தியது. இதில் எந்தளவுக்கு சேதம் ஏற்பட்டது என்பது முக்கியம் அல்ல. ஆனால், பாகிஸ்தானின் முக்கிய விமானத் தளங்களையும் அணு ஆயுதக் கிடங்குகளையும் குறிவைத்து தாக்கியது இந்தியாவுக்கு கிடைத்த தெளிவான வெற்றி.

இதை பாகிஸ்தானால் தடுக்க முடியவில்லை. ஒரு தரப்பு அணு ஆயுதக் கிடங்குகளை குறிவைத்து தாக்குதல் நடத்தும்போது, மறு தரப்பால் பதில் தாக்குதல் நடத்த முடியாமல் போனதுதான் என்னைப் பொறுத்தவரை தெளிவான வெற்றி.

இந்தியாவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் பாகிஸ்தானிடம் தொலைதூர ஏவுகணைகள் இல்லை. மேலும், இந்தியாவின் பிரம்மோஸ் மற்றும் ஸ்காலப் ஏவுகணைகளுக்கு நிகராக பாகிஸ்தானிடம் ஆயுதம் இல்லை. தன்னிடம் ஏவுகணைகள் இருப்பதாக பாகிஸ்தான் பெருமையாக கூறிக் கொள்ளலாம். அதனால் இந்தியாவின் தாக்குதலை தடுக்க முடியவில்லை.

இந்தியாவின் தாக்குதலில் நூர் கான் மற்றும் சர்கோதா போன்ற பாகிஸ்தானின் முக்கிய விமானத் தளங்கள் படுமோசமாக சேதமடைந்தன. பாகிஸ்தானின் இராணுவ செயல்பாடுகளுக்கான தலைமை இயக்குநர், இந்திய இராணுவத்தை தொடர்பு கொண்டு போர் நிறுத்தம் குறித்து பேசியதன் மூலம் பாகிஸ்தான் போருக்குத் தயாரில்லை என்பதை உணர்த்தியுள்ளார் - இவ்வாறு ரொம் கூபர் கூறியுள்ளார். (எ)




# பாகிஸ்தானியர்கள் என்று எம்மை அழைக்க வேண்டாம்

## பலூசிஸ்தான் தலைவர் கோரிக்கை

லாகூர், மே 16

தங்களை பாகிஸ்தானியர்கள் என்று அழைக்க வேண்டாமென பலூசிஸ்தான் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பலூசிஸ்தான் இனி பாகிஸ்தானின் மாகாணம் அல்ல என்றும் விடுதலை பெற்றுவிட்டதாகவும் பலூச் தலைவர் கூறியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பாகிஸ்தானின் தென்மேற்கு பிராந்தியத்தில் உள்ள மிகப்பெரிய மாகாணமான பலூசிஸ்தானை தனி நாடாக அறிவிக்க கோரி கிளர்ச்சியாளர்கள் பல ஆண்டாக போராடி வருகின்றனர்.

சமீபத்தில் இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் ஏற்பட்ட நிலையில், பலூச் அமைப்பின் தலைவர் மிர் யார் பலூச் தனது எக்ஸ் தளத்தில், "1947 ஓகஸ்ட் 11இல் ஆங்கிலேயர் வெளியேறிய போதே நாங்கள் எங்கள் சுதந்திரத்தை அறிவித்து விட்டோம். இந்திய ஊடகங்களும் யூ ரியூபர்களும் இனி பலூசிஸ்தானை பாகிஸ்தானின் மாகாண மக்கள் என குறிப்பிட வேண்டாம். நாங்கள் பாகிஸ்தானியர்கள் அல்ல, நாங்கள் பலூசிஸ்தானியர்கள். பலூசிஸ்தான் குடியரசாக எங்களை உலகம் அங்கீகரிக்க வேண்டும். பலூசிஸ்தானின் தூதரகத்தை டில்லியில் அமைக்க இந்தியா அனுமதி தர வேண்டும். ஐ.நாவும் எங்களை தனி நாடாக அங்கீகரிக்க வேண்டும்" - என கூறியுள்ளார். இதைத் தொடர்ந்து பலூசிஸ்தான் குடியரசு என சமூக ஊடகங்களில் வைரலாகி வருகிறது. (எ)

# சிரியாமீது அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடை நீக்கம்!

ரியாத், மே 16

சிரியா மீதான பொருளாதாரத் தடைகளை நீக்க உத்தரவிட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் வளைகுடா நாடுகளுக்கு நான்கு நாட்கள் பயணமாக சென்றுள்ளார். முதலில், சவுதி அரேபியாவின் ரியாத் நகருக்கு சென்றார். ரியாத் நகரில், வளைகுடா ஒத்துழைப்பு சபைக் கூட்டம் நடந்தது. இதில் பங்கேற்பதற்காக வளைகுடா ஒத்துழைப்பு சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தலைவர்கள், ரியாத்துக்கு வந்தனர்.

அவர்களில், சிரியாவின் இடைக்கால ஜனாதிபதி அகமது அல்-ஷாராவும் ஒருவர். சிரியாவில் 50 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வந்த பஷார் அல் ஆஷாத் குடும்பத்துக்கு எதிராக போராடிய கிளர்ச்சிக் குழுவின் தலைவராக அகமது அல்-ஷாரா இருந்தார். அவரை அமெரிக்கப் படைகள் பல ஆண்டுகளாக சிறை வைத்திருந்தது.

கடந்த டிசெம்பர் மாதம்,



தலைநகர் டமாஸ்கஸ் நகரை அகமது அல்-ஷாராவின் கிளர்ச்சிக் குழு கைப்பற்றியது. இதையடுத்து, அவர் அந்த நாட்டின் இடைக்கால ஜனாதிபதியாக பொறுப்பேற்றார். ஜனாதிபதியாக அல் ஆஷாத் இருந்தபோது, சிரியா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்திருந்தது. சவுதி அரேபியா பயணத்தை தொடங்குவதற்கு முன்பு, அந்த பொருளாதாரத் தடைகளை நீக்கப்போவதாக ட்ரம்ப் கூறியிருந்தார்.

ரியாத் நகரில், வளைகுடா ஒத்துழைப்பு சபைக் கூட்டத்துக்கு முன்பு, அகமது அல்-ஷாராவை ட்ரம்ப் சந்தித்தார். இந்தச் சந்திப்பில் செய்தியாளர்கள் அனுமதிக்கப்படவில்லை. கடந்த 2000ஆம் ஆண்டுக்குப் பிறகு, இரு நாடுகளின் தலைவர்களும் சந்திப்பது இதுவே முதல்முறை. ட்ரம்ப் - இளவரசர் சல்மான் - அகமது அல்-ஷாரா ஆகியோர் இடையிலான சந்திப்பில், துருக்கி ஜனாதிபதி எர்டோகன், தொலைபேசி அழைப்பு மூலம் கலந்து கொண்டார்.

பின்னர், வளைகுடா ஒத்துழைப்பு சபைக் கூட்டத்தில் பேசிய ட்ரம்ப்,"சிரியா மீதான பொருளாதாரத் தடைகளை நீக்க உத்தரவிட்டுள்ளேன். அந்தத் தடை, சிரியாவை முடக்குவதாக இருந்தது. தடையை நீக்குவது சிரியாவுக்கு புதிய தொடக்கமாக அமையும். சவுதி அரேபிய பட்டத்து இளவரசர்தான் இந்த முடிவு எடுக்கக் காரணம்" - என்றார்.

பொருளாதாரத் தடை நீக்கம் குறித்து ட்ரம்ப் அறிவித்ததையடுத்து, சிரியாவில் அனைத்துத் தரப்பினரும் கொண்டாடி மகிழ்ந்தனர். (எ)

# பாகிஸ்தானுக்கு ஐ. எம். எவ். ரூ. 30,277 கோடி விடுவித்தது

இஸ்லாமாபாத், மே 16

பாகிஸ்தானுக்கு சர்வதேச நாணய நிதியம் இலங்கை மதிப்பில் 30, 277 கோடி ரூபாயை விடுவித்தது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவிகளை பாகிஸ்தான் தொடர்ந்து நம்பியிருக்கிறது என்று இந்தியா தெரிவித்துள்ளது.

நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் பாகிஸ்தானுக்கு 700 கோடி டொலர் கடன் வழங்க கடந்த ஆண்டு சர்வதேச நாணய நிதியத்துக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதில், பாகிஸ்தானுக்கு முதல் தவணையாக 110 கோடி டொலர் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் சர்வதேச நாணய நிதியம் 2ஆவது தவணையாக 102 கோடி டொலர் (30, 277 கோடி ரூபாய்) விடுவித்தது. இத்துடன், பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்ட கடன், 212 கோடி டொலராக அதிகரித்துள்ளது.

பாகிஸ்தானுக்கு வழங்கப்படும் தொடர்ச்சியான நிதியுதவி இராணுவ நோக்கங்களுக்காகவோ அல்லது அரசு ஆதரவு பெற்ற பயங்கரவாதத்துக்காகவோ பயன்படுத்தப்படுவதற்கான எல்லா சாத்தியக்கூறுகளும் இருப்பதாக சர்வதேச நாணய நிதியத்தை இந்தியா எச்சரித்தது.

மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவிகளை பாகிஸ்தான் தொடர்ந்து நம்பியிருக்கிறது என்று இந்தியா தெரிவித்துள்ளது. (எ)

# அலெக்ஸ் டி மினார் அதிர்ச்சி தோல்வி!

ரோம், மே 16

இத்தாலி ஓபின் ரென்னிஸ் தொடரில் அதிர்ச்சி தோல்வியடைந்த அலெக்ஸ் டி மினார் தொடரிலிருந்து வெளியேறினார்.

பல முன்னணி வீரர் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இத்தாலி ஓபின் ரென்னிஸ் தொடர் ரோமில் நடைபெற்று வருகிறது. இதில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டம் ஒன்றில் அவுஸ்திரேலிய வீரர் அலெக்ஸ் டி மினார் - அமெரிக்க வீரர் ரொமி பௌவுல் ஆகியோர் மோதினர்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்திய ரொமி பௌவுல் 7-5,6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றார். அதிர்ச்சி தோல்வியடைந்த அலெக்ஸ் டி மினார் தொடரிலிருந்து வெளியேறினார். (எ)



# ஜேக் ப்ரேசர் விலகல் டில்லி அணிக்கு சிக்கல்

மும்பை, மே 16

நடப்பு ஐ. பி. எல். தொடரில் மீதமுள்ள போட்டிகளிலிருந்து ஜேக் ப்ரேசர் மெக்கர்க் விலகியுள்ளார்.

பஹல்காம் தாக்குதலை அடுத்து இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் நிலவி வந்தது. இதன் காரணமாக இந்தியாவில் நடைபெற்று வந்த 18ஆவது ஐ. பி. எல். கிரிக்கெட் தொடர் ஒருவார காலம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. போர் பதற்றம் தணிந்ததை தொடர்ந்து அணி நிர்வாகிகள், ஒளிபரப்புதாரர்கள், பாதுகாப்புத் தரப்புகள் உள்ளிட்ட சம்பந்தப்பட்டவர்களுடன் ஆலோசனை நடத்திய இந்திய கிரிக்கெட் சபை ஐ. பி. எல். போட்டி நாளை 17ஆம் திகதி மீண்டும் தொடங்கும் என அறிவித்துள்ளது.13 லீக் ஆட்டங்கள் மற்றும் இறுதிப்போட்டி உட்பட 4 பிளே-ஒவ் சுற்று என மொத்தம் 17 போட்டிகள் நடத்தப்படுகிறது. மாற்றப்பட்ட புதிய அட்டவணைப்படி இரண்டு நாட்களில் இரண்டு ஆட்டங்கள் நடைபெறுகின்றன. மே 29ஆம் திகதி இறுதிப்போட்டிக்கான முதலாவது தகுதி சுற்றும், மே 30 ஆம் திகதி வெளியேற்றுதல் சுற்றும் ஜூன் முதலாம் திகதி இறுதிப்போட்டிக்கான 2ஆவது தகுதி சுற்றும், ஜூன் 3ஆம் திகதி இறுதிப்போட்டியும் நடைபெறுகிறது.

இந்த நிலையில் டில்லி அணியில் இடம்பெற்றிருந்த ஜேக் ப்ரேசர் மெக்கர்க் அவுஸ்திரேலியாவுக்கு சென்றுவிட்டார். அவர் மீதமுள்ள ஐ. பி. எல். போட்டிகளிலிருந்து விலகியுள்ளார். இதனையடுத்து அவருக்குப் பதிலாக பங்களாதேஷ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் முஸ்தபிசுர் ரஹ்மான் டில்லி அணியில் இடம்பிடித்துள்ளார். (எ)





# இத்தாலி ஓபின் ரென்னிஸின் அரையிறுதியில் கோகோ காப்

ரோம், மே 16

இத்தாலி ஓபின் ரென்னிஸ் தொடரில் அமெரிக்க வீராங்கனை கோகோ காப் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இத்தாலி ஓபின் சர்வதேச ரென்னிஸ் போட்டி தொடர் ரோமில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் 3ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் கோகோ காப் ரஷ்யாவின் ஆன்ட்ரீவாவுடன் மோதினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் கோகோ காப் 6-4, 7-6 (7-5) என்ற நேர் செட்டில் மிரா ஆன்ட்ரீவாவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

# இத்தாலி ஓபின் ரென்னிஸ்: அரையிறுதியில் ஜாஸ்மின்

ரோம், மே 16

இத்தாலி ஓபின் ரென்னிஸ் தொடரின் அரையிறுதிக்கு ஜாஸ்மின் பவுலினி முன்னேறியுள்ளார்.

இத்தாலின் ரோம் நகரில் இத்தாலி ஓபின் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி சுற்றில் 6ஆம் நிலை வீராங்கனையான இத்தாலியின் ஜாஸ்மின் பவுலினி, 13ஆம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் டயானா ஸ்னைடருடன் மோதினார்.

இதில் பவுலினி 6-7 (1-7), 6-4, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார். இதன் மூலம் 11 ஆண்டுகளுக்குப் பிறகு இத்தாலி ஓபின் காலிறுதி சுற்றுக்கு முன்னேறிய இத்தாலி வீராங்கனை என்ற பெருமையை ஜாஸ்மின் பவுலினி பெற்றார். இதற்கு முன்னர் 2014ஆம் ஆண்டு சாரா எரானி அரையிறுதிக்கு தகுதி பெற்றிருந்தார். (எ)




# ஆர்.சி.பியின் தலைவர் ரஜத் பட்டிதார் காயம்

பெங்களூரு, மே 16

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணியின் தலைவர் ரஜத் பட்டிதார் காயத்தால் அவதிப்பட்டு வருவதால் ஐ. பி. எல். தொடரின் எஞ்சிய போட்டிகளில் அவர், பங்கேற்பது சந்தேகம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியா, பாகிஸ்தான் போர் பதற்றம் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஐ.பி.எல். தொடர் நாளை மீண்டும் தொடங்குகிறது. அன்றைய தினம் பெங்களூரு சின்னச்சாமி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணி, கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியுடன் மோதுகிறது.

பெங்களூரு அணிக்கு இந்த ஆட்டம் உட்பட 3 ஆட்டங்கள் எஞ்சியுள்ளன. 16 புள்ளிகளுடன் பட்டியலில் 2ஆவது இடத்தில் உள்ள பெங்களூரு அணி, ஏதேனும் ஓர் ஆட்டத்தில் வெற்றி பெற்றாலே பிளே ஒப் சுற்றுக்கு முன்னேறிவிடும்.

இந்த நிலையில், பெங்களூரு அணியின் தலைவர் ரஜத் பட்டிதார் தொடரின் எஞ்சிய ஆட்டங்களில் விளையாடுவது சந்தேகம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 3ஆம் திகதி சென்னை அணிக்கு எதிராக நடைபெற்ற ஆட்டத்தின்போது ரஜத் பட்டிதாருக்கு கை விரலில் காயம் ஏற்பட்டது. இந்தக் காயம் குணமடைய அதிக நாட்களாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், குறைந்தபட்சம் இரு ஆட்டங்களையாவது



ரஜத் பட்டிதார் தவறவிடக்கூடும். பிளே ஒவ் சுற்று தொடங்குவதற்குள் அவர், காயத்தில் இருந்து முழுமையாக குணமடைவதற்கான வாய்ப்புகள் குறைவே என்று கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அநேகமாக எஞ்சிய ஆட்டங்களில் பெங்களூரு அணியை ஜிதேஷ் சர்மா வழிநடத்தக்கூடும். ஏற்கனவே காயம் காரணமாக தேவ்தத் படிக்கல் விலகியிருந்தார். வேகப்பந்து வீச்சாளரான ஜோஷ் ஹேசில்வுட், லுங்கி நிகிடி ஆகியோர் மீண்டும் அணியுடன் இணைவது இன்னும் உறுதி செய்யப்படவில்லை. இதனால் பெங்களூரு அணிக்கு பின்னடைவு ஏற்படக்கூடும். (எ)

# ஐ. சி. சி. டெஸ்ட் தரவரிசை: ஜடேஜா வரலாற்று சாதனை



மும்பை, மே 16

ஐ. சி. சி. டெஸ்ட் தரவரிசையில் தொடர்ந்து முதலிடத்தில் நீடித்து ரவீந்திர ஜடேஜா புதிய வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரரான ரவீந்திர ஜடேஜா சிறந்த சகல துறை வீரராக திகழ்கிறார்.

குறிப்பாக டெஸ்ட் கிரிக்கெட் தொடர் தரவரிசையில் கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் நம்பர் 1 (முதல்) இடத்தை அலங்கரித்து வருகிறார். தொடர்ச்சியாக 1,151 நாட்கள் நம்பர் 1 இடத்தில் அவர் நீடிக்கிறார்.

இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிக நாட்கள் நம்பர் 1 (முதல் இடத்தில்) வீரர் என்ற மாபெரும் வரலாற்று சாதனையை ஜடேஜா படைத்துள்ளார்.

இதுவரை 80 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள ஜடேஜா 3,370 ஓட்டங்களும் 323 விக்கெட்களும் வீழ்த்தியுள்ளார். (எ)

# புதிய வீரர்களை இணைக்க அனுமதி

மும்பை, மே 16

நடப்பு ஐ. பி. எல். தொடரில் புதிய வீரர்களை இணைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பஹல்காம் தாக்குதலை அடுத்து இந்தியா- பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் நிலவி வந்தது. இதன் காரணமாக இந்தியாவில் நடைபெற்று வந்த 18ஆவது ஐ. பி. எல். கிரிக்கெட் தொடர் ஒருவார காலம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில், எஞ்சிய ஐ. பி. எல். போட்டிகளில் சில வெளிநாட்டு வீரர்கள் விளையாடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

எனவே மீதமிருக்கும் போட்டிகளில் சில வெளிநாட்டு வீரர்கள் விளையாட மாட்டார்கள் என்பதால் மாற்று வீரர்களை இணைக்க ஐ.பி.எல். அணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், தற்போது இணைக்கப்படும் வீரர்கள், நடப்பு ஐ.பி.எல். தொடரில் மட்டுமே விளையாட அனுமதிக்கப்படுவார்கள். 2026 ஐ.பி.எல். தொடரில் விளையாட தகுதியற்றவர்களாகவே கருதப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## இலங்கையில்...

போல தோன்றலாம். ஆனால், அது எதிர்காலத்துக்கான பெரும் நம்பிக்கையை வழங்குகிறது", என்றார்.

நெய்ல் ஹட்சன் எம். பி. பேசுகையில், "தமிழ் மக்களின் நீதி, சமாதானத்துக்கான எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வதற்காக பிரித்தானிய அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுவேன் - என்றார்.

"இலங்கை அதிகாரிகளுக்கு பிரிட்டன் விதித்த தடைகளை வரவேற்கிறேன். பொறுப்புக்கூறலுக்காக இன்னமும் செய்யவேண்டிய விடயங்கள் உள்ளன - என்று ஸ்ரீபன் ரிம்ஸ் எம். பி. கூறினார். (ஐ)

## சட்டவிரோதமாக...

படகும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைதான அகதிகளில் இரு பெண் பிள்ளைகளும் அவர்களின் பெற்றோரும் அடங்குவர். நாட்டில் நீடித்த போர் காரணமாக 1998ஆம் ஆண்டு மன்னாரிலிருந்து படகு மூலமாக பெற்றோர் தமிழகம் சென்றிருந்தனர். பிள்ளைகள் தமிழகத்தில் பிறந்திருந்தனர் என்று கூறப்பட்டது.

வல்வெட்டித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-02)

## குற்றவாளிகளை...

பிரிட்டன் பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. இவரின் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தனது உரையில், இலங்கையில் முள்ளிவாய்க்காலில் சிக்குண்டிருந்த மக்கள் இனப்படுகொலை செய்யப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, லண்டனில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் எப்படி 2009ஆம் ஆண்டு லண்டனை ஸ்தம்பிக்க செய்தனர் என்பதை அவர் அப்போது நினைவுகூர்ந்தார்.

அத்துடன், இந்த ஆண்டில் இலங்கையின் இராணுவ அதிகாரிகளுக்கு பிரிட்டன் விதித்த தடைகளை வரவேற்ற அவர், "இலங்கையில் மனித உரிமைகள் மீறலில் ஈடுபட்டவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என்று தொடர்ந்தும் அழுத்தம் கொடுப்பேன்", என்றும் கூறினார். (ஐ)

## குமுதினி...

தனது 7 மாத குழந்தையை இழந்தவ ரும் படுகாயமடைந்து தப்பியவருமான விசுவலிங்கம் அன்னலட்சுமி ஆகியோர் நினைவுச் சுடர்களை ஏற்றிவைத்தனர்.

பின்னர், சிறீதரன் எம். பி., நினைவேந்தல் குழு தலைவர் வி. ருத்திரன் ஆகியோர் நினைவுத்தூபிக்கு மலர் மாலை அணிவித்தனர். தொடர்ந்து மலர் அஞ்சலி நடைபெற்றது.

இதனை தொடர்ந்து முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையின் நினைவாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

இதேசமயம், படுகொலையான உறவுகளின் ஆத்ம சாந்திக்காக நேற்று காலை 8 மணிக்கு மாவிலித் துறை வீரபத்திரப் பிள்ளையார் ஆலயம், மாவிலித்துறை சவேரியார் ஆலயம், தென்னிந்திய திருச்சபை ஆலயம், தேவசபை ஆலயம் என்பவற்றில் சம நேரத்தில் பூசை வழிபாடுகளும் நடைபெற்றன.

1985 மே 15ஆம் நாள் நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்கு பொதுமக்களுடன் சென்று கொண்டிருந்த குமுதினி படகை மறித்து ஏறிய கடற்படையினர் அங்கிருந்தவர்களை வெட்டியும் குத்தியும் படுகொலை செய்தனர். இந்த சம்பவத்தில் 33 பேர் உயிரிழந்தனர் 30இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொட்டாஞ்சேனை...

பதிவு செய்யப்பட்டன.

முதலாவதாக மாணவி உயிரிழந்த அடுக்குமாடி குடியிருப்பின் தலைவரின் வாக்குமூலமும் அடுத்ததாக, மாணவியின் தாயாரின் வாக்குமூலமும் பதிவு செய்யப்பட்டன.

இதைத் தொடர்ந்து, மாணவியின் மரணம் தொடர்பில் மேலதிகமாக சாட்சியங்களை பதிவு செய்யும் நடவடிக்கை எதிர்வரும் 22ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)

## இனப்படுகொலை...

புலிகளுக்கும் இடையிலான மோதலே என்றும் கூறி, நாமல் ராஜபக்ஷ தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் விதமாக நாமல் ராஜபக்ஷவின் பதிவை வெளியிட்டே பிரம்டன் நகர முதல்வர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தனது பதிவில் தெரிவித்தவை வருமாறு,

"தமிழ் இனப்படுகொலை நினைவுத் தூபிக்கான ராஜபக்ஷ குடும்பத்தின் எதிர்ப்பு - அந்த குடும்பத்தின் கரங்களில் அப்பாவிகள் கொல்லப்பட்டமையை அங்கீகரிக்கும் சரியான பாதையில் நாம் சென்று கொண்டிருக்கிறோம் என்பதற்கான உறுதியான சமிக்ஞை. இனப்படுகொலை நடக்கவில்லை என்று உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தால் - நீதியை குழப்புவதற்கான நடவடிக்கைகள், வழக்கு விசாரணைகளிலிருந்து மறைந்திருத்தல் போன்றவற்றை கைவிட்டு, சர்வதேச விசாரணைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை ராஜபக்ஷ குடும்பம் வழங்கவேண்டும்.

இது அவர்களின் நியூரம்பேர்க் (ஹிட்லர் காலத்து ஜேர்மனியின் அரசியல் கொலைகள், இராணுவ செயல்பாடுகள் - அதன் முரண்பாட்டு தலைமை செயல்பாடுகளை விசாரிக்க இரண்டாம் உலக போர் தோல்விக்கு பின்னர் அமைக்கப்பட்ட தீர்ப்பாயம்) தருணம். இந்தக் குடும்பம் பொறுப்புக்கூறலை எதிர்கொள்வதற்கு பதில், இலங்கை அரசாங்கத்தால் பாதுகாக்கப்பட்ட நிலையில் ஆடம்பரத்தில் மறைந்துள்ளது. இது வெட்கக்கேடான விடயம்.

ராஜபக்ஷ குடும்பம் இழைத்துள்ள மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் பொல் பொட், ஸ்லோபோடன், மிலோசெவிக், ஹென்றிச் ஹிம்லர் மற்றும் பிளிசியன் கபுகா ஆகியோர் இழைத்த மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுடன் போட்டியிடும் அளவுக்கு மோசமானவை.

கனடாவில் உருவாக்கப்பட்டுள்ள தமிழர் இனப்படுகொலை நினைவுத் தூபியை ராஜபக்ச குடும்பம் எதிர்ப்பது அந்த நினைவுத்தூபிக்கு கிடைத்த கௌரவமாகும் - என்று கூறியுள்ளார். (ஐ)

# உள்ளூராட்சிகளில் ஊழலை தடுக்க விசாரணை பிரிவுகள்

### ஜனாதிபதி அநுர அனுமதி

கொழும்பு, மே 16

மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகளில் இடம்பெறும் ஊழல் முறைகேடுகளை தடுக்க அமைச்சு மட்டத்தில் நிறுவப்பட்ட விசாரணை பிரிவுகளை மாகாண சபைகளிலும் நிறுவுவதற்கு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க அனுமதி அளித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கும் மாகாண ஆளுநர்களுக்கும் இடையில் நேற்று நடந்த கலந்துரையாடலிலேயே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

மாகாணங்களில் உள்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி மற்றும் அவை எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து இங்கு விவாதிக்கப்பட்டதோடு குறித்த பிரச்னைகளுக்கு சாதகமான தீர்வுகளை வழங்கவும் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

கடந்த வருடத்தைவிட மாகாண சபைகள் மூன்று மடங்கு நிதி ஒதுக்கீட்டை பெற்றுள்ளதால், ஒரு வருடத்துக்குள் நிதியைப் பயன்படுத்துவதில் உள்ள சவால்கள் குறித்து ஆளுநர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினர்.

அந்த ஏற்பாடுகளை சரியான முறையில் நிர்வகிப்பதன் முக்கியத்துவம் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டது. (ஐ)

# அரசமைப்பை மாற்ற முயன்றால் சர்வசன வாக்கெடுப்பு கோருவோம்!

### நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, மே 16

இலங்கை ஒரு ஜனநாயக நாடாகும். ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் அரசமைப்பை மாற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்த ஜனாதிபதி விரும்பினால் சர்வசன வாக்கெடுப்புக்கு செல்வோம். சர்வசன வாக்கெடுப்பில் ஜனாதிபதியின் சர்வாதிகார ஆட்சி தொடர்பில் மக்கள் தீர்ப்பு வழங்கட்டும் என்று நாமல் ராஜபக்ஷ எம். பி. தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு நேற்று கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"அன்று எம்மீது பெரும் குற்றச்சாட்டுகளை முன்வைத்தவர்கள். இன்று அதனைவிட மோசமாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

பெரும்பான்மையுடன் வெற்றி பெறாத சபைகளில் எவ்வாறு ஆட்சியமைக்கப் போகின்றனர் என்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் கட்சிகளுடன் பேச்சுகளை முன்னெடுக்கவில்லை. மாறாக, தனிநபர்களுடனேயே பேச்சுகளில் ஈடுபட்டுள்ளனர்.

"முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் முரண்பாடுகள் ஏற்படக் காரணமும் அவர் தனிநபர்களுடன் பேச்சுகளை முன்னெடுத்தமையாலேயே. அவருடனான சந்திப்பிலும் எமது கட்சியின் நிலைப்பாட்டை தெளிவாகத் தெரிவித்திருக்கிறோம்.

"கடந்த காலங்களில் ஏனைய கட்சிகள் அவற்றின் ஆண்டு நிறைவை கொண்டாடியபோது ஆற்றிய உரைகளை மக்கள் மீண்டும் கேட்க வேண்டும். அவர்கள் நாட்டுக்கு ஆற்றிய சேவைகள் தொடர்பிலேயே உரையாற்றினர். ஆனால், ஏனைய கட்சிகளை பற்றி அரசியல் பேசவில்லை. முதன்முறையாக மக்கள் ஆணையைப் பெற்ற ஒரு கட்சி அதன் ஆண்டு நிறைவு விழாவில் எதிர்த்தரப்பினரை பழிவாங்கும் நோக்கத்திலான உரைகளை ஆற்றியமை உண்மையில் கவலைக்குரியது. ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க கடந்த 6 மாதங்களில் நாட்டுக்கு எந்த சேவையையும் ஆற்றவில்லை. அதனால்தான் ஏனைய கட்சிகளைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார். - என்றார். (ஐ)

## அரியாலை...

எச்சங்கள் மீட்கப்பட்டன. இது தொடர்பான சோதனையில் மீட்கப்பட்டவற்றில் 40இற்கும் மேற்பட்டவை மனித எலும்புகளே என்பது உறுதிப்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, நீதிவான் அந்த இடத்தை பெப்ரவரி 20ஆம் திகதி ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, இது தொடர்பான வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு குறித்த பகுதியை ஸ்கான் செய்து ஆய்வு செய்யவும் அகழ்வு பணியை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே நேற்றைய தினம் அந்தப் பகுதியில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உள்ளூராட்சி...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கிறது. உள்ளூராட்சி சபைகள் ஆளும் கட்சி உறுப்பினர்களினால் நிருவகிக்கப்படுகிறதா அல்லது எதிர்க்கட்சி உறுப்பினர்களினால் நிருவகிக்கப்படுகிறதா என்பதை பார்க்காமல், அவை செயற்திறனுடனும் பயனுறுதியுடனும் இயங்குவதற்காக சகல சபைகளுக்கும் ஒப்புரவான முறையில் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

ஒவ்வொரு உள்ளூராட்சி சபையும் சமமான பெறுமதியைக் கொண்டிருப்பதால் எந்த கட்சியினால் அவை நிருவகிக்கப்படுகின்றன என்பது குறித்து எந்த வேறுபாடும் காட்டப்படக் கூடாது. உள்ளூராட்சி சபைகளின் அந்த பெறுமதி மக்களின் அதிகாரத்தில் பதிந்து கிடக்கிறது. சகல தரப்புகளையும் அரவணைக்கும் ஆட்சிமுறையை மேம்படுத்துவது என்பது தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறைகளில் பல்வேறு சமூகங்களும் பயனுறுதியுடைய வகையில் ஈடுபடுத்தப்படுவதையும் பிரதிநிதித்துவம் செய்யப்படுவதையும் உறுதிசெய்வதற்கு நிலைபேறான முயற்சிகளை வேண்டிநிற்கிறது-என்றுள்ளது. (அ)

## அதிக ஆசனங்களை...

குறித்து இரு கட்சிகளின் தலைமைகளும் பேசி முடிவு எடுக்கும் என்றும் அவர் கூறினார்.

வவுனியா உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பாக ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, இலங்கை தமிழ் அரசுக் கட்சியினர் நேற்று சந்தித்துப் பேசினர். இந்த சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "வவுனியா மாநகர சபையில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி ஆட்சி அமைப்பதற்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சி முழுமையான ஆதரவை வழங்கும். இதேபோல, வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, செட்டிகுளம் பிரதேச சபைகளில் தமிழ் அரசு கட்சி அதிக ஆசனங்களை பெற்றுள்ளது. இதனால், தமிழ் அரசுக் கட்சி ஆட்சியமைக்க ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி ஆதரவு வழங்குவது என்று இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பதற்கான இணக்கப்பாடே தற்போது எட்டப்பட்டுள்ளது. தவிசாளர், பிரதி தவிசாளரை நியமிப்பது தொடர்பில் ஆட்சி அமைக்கப்படும் சந்தர்ப்பத்தில் பேசி தீர்மானிக்கப்படும். அத்துடன், வேறு சில கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களில் போட்டியிட்டு வென்றவர்களுடனும் நாம் கலந்துரையாடியுள்ளோம். சபைகள் தொங்கு நிலையில் உள்ள ஆட்சியாக இல்லாமல் பூரணபலம் கொண்ட - முடிவுகளை எடுக்கக்கூடிய மன்றங்களாக வவுனியாவில் உள்ள நான்கு மன்றங்களும் இருக்கவேண்டும். எனவே, வவுனியாவில் உள்ள நான்கு சபைகளிலும் நாங்கள் (தமிழ்த் தேசிய கட்சிகள்) ஆட்சியமைக்கக்கூடிய சூழல் இருக்கிறது. அத்துடன், இந்த இணக்கப்பாடு உள்ளூராட்சி மன்றங்களுடன் மாத்திரம் முடிவடையாமல் தொடரவேண்டும் என்றும் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. இந்த இணக்கப்பாட்டை வட, கிழக்கு முழுவதும் தொடர்வதற்கு இரண்டு கட்சிகளின் தலைமைகளும் பேசி ஒரு முடிவுக்கு வருவார்கள் என எதிர்பார்க்கிறோம்" என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இனப்படுகொலை குற்றம் இல்லையென்றால் சர்வதேச விசாரணைகளுக்கு அஞ்சுவது ஏன்?

## அரசிடம் கஜேந்திரகுமார் எம்.பி. கேள்வி



கொழும்பு, மே. 16

**இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான இனப்படுகொலை குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என அரசாங்கம் கருதினால் ஏன் அது சர்வதேச விசாரணைகளை எதிர்கொள்வது குறித்து இவ்வளவு தூரம் அச்சப்படுகின்றது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வி எழுப்பியுள்ளார்.**

இலங்கைக்கான கனடாவின் தூதுவரை அழைத்து எதிர்ப்பு வெளியிட்டமை குறித்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தின் முகநூல் பதிவுக்கான பதில் பதிவில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிரான இனப் படுகொலையில் ஈடு பட்டது என்ற குற்றச்சாட்டுகள் ஆதார மற்றவை என உண்மை யில் நீங்கள் கருதினால், சர்வதேச சுயாதீன குற்றவியல் விசாரணையை எதிர்கொள் வதற்கு - அரசாங்கம் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலையில் ஈடுபடவில்லை என்பதை நிரூபிப்பதற்கு நீங்கள் ஏன் இவ்வளவு தூரம் அச்சமடைகின்றீர்கள்?

நீங்கள் ஏன் ரோம் சட்டத்தை ஏற்றுக்கொண்டு அதில் கைச்சாத்திட்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரணைகளை மேற்கொள்வதற்கு அனும திக் கக்கூடாது? உண்மை என்னவென்றால்

அமைச்சரே, அரசாங்கம் உண்மையை கண்டு அஞ்சி நடுங்குகின்றது. உண்மையே நல்லிணக்கத்துக்கான ஒரே வழி. ஆனால் முன்னைய அரசாங்கங்கள் போன்று உங் கள் அரசாங்கமும் அதனை மறுக்கின்றது - என்றுள்ளது.

# மிரட்டுகிறார் ஜனாதிபதி!

## சுமந்திரன் சுட்டிக்காட்டு



கொழும்பு, மே. 16

தங்களிடம் மூன்றிலிரண்டு (2/3 ) பெரும்பான்மை உள்ளதாகவும் தன்னிடம் நிறைவேற்று அதிகாரம் உள்ள தாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மிரட் டுகிறார் என தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் 60 வருட நிறைவையொட்டி நேற்று முன் தினம் புதன்கிழமை விஹாரமகாதேவி பூங்காவில் இடம்பெற்ற நிகழ்வில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உரையாற்றியிருந்தார்.

இந்த உரை குறித்து தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தனது எக்ஸ் பக்கத்தில் மேலும் குறிப்பிட்டுள்ள சுமந்திரன்,

“தங்களிடம் முன்றிலிரண்டு ( 2/3 ) பெரும்பான்மை இருப்பதாகவும் தன்னிடம் நிறைவேற்று அதிகாரம் உள்ளதாகவும் ஜனாதிபதி மிரட்டுகிறார். “அதிகாரம் கெடுவிக்கும் முழுமையான அதிகாரம் முற்றிலும் கெடுவிக்கும்.” யாழ்ப்பாண மாநகர சபையில் 10/41 பெரும்பான்மை என்று சொல்லும்போது அவரது கணிதத் தகைமை வெளிப்படுகிறது.” என்று கூறியுள்ளார். (அ)

# கிளிநொச்சியை அடைந்தது ஊர்தி




யாழ்ப்பாணம், மே. 16

தமிழினப் படுகொலையைச் சித்திரிக்கும் விதமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நல்லூர் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் காலை ஊர்திப் பவனியொன்று ஆரம்பமாகியது.

இந்த ஊர்தி நேற்று காலை கிளிநொச்சியை அடைந்தது.இந்நிலையில் பரந்தன், கிளிநொச்சி நகர் உள்ளிட்ட பகுதிகளில் குறித்த ஊர்தியை வரவேற்று மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

குறித்த ஊர்தி பவனி வடக்கைச் சேர்ந்த ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சென்று இறுதியாக முள்ளிவாய்க்காலை சென்றடையவுள்ளது. (அ)

# வீதி விபத்துகளை தடுக்க இனி ஏ.ஐ. தொழில்நுட்பம்!



கொழும்பு, மே. 16

இலங்கையில் வீதி விபத்துகளைத் தடுக்க நீண்ட தூர பேருந்துகளில் செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் ஜி.பி.எஸ் மற்றும் சி.சி.ரி.வி அமைப்புகள் அறி முகப்படுத்தப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு அளித்த செவ்வியின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் நீண்ட தூர பஸ்கள் இரண்டிலும் ஏ.ஐ. அமைப்பு விரைவில் அறிமுகப்படுத்தப்படும்.

பஸ் சாரதி சோர்வாக இருக்கிறாரா, தூக்கத்தில் இருக்கிறாரா? அல்லது வாகனம் ஓட்டும்போது, தொலைபேசி அழைப்புகளைச் செய்கிறாரா, என்பதை கண்காணிக்கவும் இந்த அமைப்பு உதவும்.

பஸ் பயணத்தில் சாரதிகள் இயந்திரக் கோளாறு, வீதி நிலைமைகள் மற்றும் வெளிச்சம் போன்ற பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். இருப்பினும், சாரதியின் செயல்பாடுகளும் கண்காணிக்கப்படவேண்டும். இது போன்ற ஒரு அமைப்பு வெளிநாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதாவது, ஏ.ஐ. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் சி.சி.ரி.வி மற்றும் ஜி.பி.எஸ் அமைப்புகள் பஸ்ஸில் நிறுவப்பட்டுள்ளன.

இது சாரதி தூக்கத்தில் இருக்கிறாரா? சோர்வாக இருக்கிறாரா?அல்லது அவர்களின் கைபேசியை பயன்படுத்துகிறாரா என்பதைச் சரி பார்க்க உதவுகிறது.

அதேபோன்று, இலங்கையில் உள்ள பஸ்களில் இந்த அமைப்பை அறிமுகப்படுத்த நாங்கள் முன்மொழிந்துள்ளோம்.அனைத்து நீண்ட தூர பஸ்களும் பயணத்தைத் தொடங்குவதற்கு முன் முழு ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய ஒரு அமைப்பு அறிமுகப்படுத்தப்படும் - என்றார். (அ)

# கமால் குணரட்ணவுக்கு எதிராக பிரிட்டன் தடை விதிக்கவேண்டும்

## ஆதாரங்களுடன் ஆவணத்தை சமர்ப்பித்தது சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம்

கொழும்பு, மே. 16

இலங்கையின் முன்னாள் இராணுவ அதிகாரி கமால் குணரட்ணவுக்கு எதிராக தடைகளை விதிக்கவேண்டும் என கோரும் ஆவணத்தை ஆதாரங்களுடன் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் பிரிட்டனின் வெளிவிவகார பொதுநலவாய அமைச்சிடம் கையளித்துள்ளது

இது தொடர்பில் அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது-இலங்கையில் யுத்தம் முடிவடைந்ததை குறிக்கும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தை நாங்கள் நெருங்கிக்கொண்டிருக்கின்ற இந்த தருணத்தில் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் இலங்கையின் முன்னாள் இராணுவ அதிகாரி கமால் குணரட்ணவுக்கு எதிராக தடைகளை விதிக்க வேண்டியமைக்கான ஆதாரங்கள் அடங்கிய ஆவணத்தை பிரிட்டனின் வெளிவிவகார பொதுநலவாய சர்வதேவ அபிவிருத்தி அமைச்சிடம் கையளித்துள்ளோம்.

கமால் குணரட்ணவுடன் இணைந்து பணியாற்றிய 58ஆவது படைப்பிரிவின் தளபதி சவேந்திர சில்வாவுக்கு எதிராக பாரிய மனித உரிமை மீறல்களுக்காக அமெரிக்கா தடை விதித்துள்ளதையும் அவரும் அவரது குடும்பத்தினரும் அமெரிக்காவுக்கு செல்ல முடியாது என்பதையும் நாங்கள் சுட்டிக்காட்டியுள்ளோம்.

பிரிட்டனும் சவேந்திர சில்வாவுக்கு எதிராக தடைகளை விதித்துள்ளது.2009 இல் கமால் குணரட்ண சவேந்திர சில்வாவின் கட்டளைத் தளபதியாக செயற்பட்ட ஜகத் ஜயசூரியவுக்கு எதிராக பிரிட்டன் தடைகளை அறிவித்துள்ளதையும் நாங்கள் சுட்டிக்காட்டியுள்ளோம்.

யுத்த கால பாதுகாப்புச் செயலாளராக பணியாற்றிய இவர்களின் தலைமை அதிகாரி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக கனடா ஏற்கனவே தடைகளை விதித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளோம்.

மேலும் முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக கனடா தடைகளை விதித்துள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளோம்-என்றுள்ளது. (அ)

# இலங்கைச் சிறைகளில் தமிழக மீனவருக்கு உதவித்தொகையை தாமதமின்றி வழங்குக!

## தமிழக அரசிடம் கோரிக்கை

சென்னை, மே. 16

இலங்கைச் சிறைகளில் உள்ள, தமிழக மீனவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையைத் தாமதமின்றி வழங்குமாறு தமிழக அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தமிழக மீனவர்களின் குடும்பத்துக்கு, தமிழக அரசின் உதவித் தொகையாக இந்திய மதிப்பில் ரூ. 350 வழங்கப்படுகிறது.

இந்த தொகை, மீனவர்கள் சிறையிலிருக்கும் நாட்களை மொத்தமாகக் கணக்கீடு செய்து நாள் ஒன்றுக்கு ரூபாய் 350 வீதம் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட மீனவர்களுக்கான உதவித் தொகையை வழங்குவதில் அதிகாரிகள் தாமதம் காட்டி வருவதாகப் பாதிக்கப்பட்ட மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தற்போது மீன்பிடி தடைக்காலம் அமுலில் உள்ளதால் தொழில் இன்றி மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே தாமதம் இன்றி உதவித் தொகையை விரைந்து வழங்க வேண்டும் எனவும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# சிகிரியா ஹோட்டலில் 40 தோட்டாக்கள் மீட்பு!

கொழும்பு, மே. 16

சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் சிகிரியா பகுதியில் உள்ள ஒரு சொகுசு ஹோட்டலில் 40 தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக சிகிரியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹோட்டல் முகாமையாளர் வழங்கிய முறைப்பாடைத் தொடர்ந்து, சிகிரியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோது ஹோட்டலில் உள்ள அலுமாரியில் ஒரு சிறிய பெட்டியில் தோட்டாக்கள் இருப்பது தெரியவந்தது.

தோட்டாக்களின் உரிமையாளர் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. சந்தேக நபர்களைக் கைது செய்ய சிகிரியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.